Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ புரட்டாசி 27 ஆம் நாள் | ஐ. அவ்வல் 2 | (13-10-61) | வெள்ளிக்கிழமை | இதழ் 207

★ நாவிற்கு ருசியும்
★ உடலுக்கு உறுதியும்
அளிப்பது
மொணரு அன் ரோஸ்
பப்படங்கள்
மயில், ரோஸ் மூவர்ண அடையாளங்களைக்
கவனித்து வாங்குக.
கண்டிப்பகுதி விநியோகஸ்தர்கள்.
ஜெகஜோதி அன் கோ.
குருதெனியா.

# அரசாங்கத்தை கவிழ்க்கமுயற்சி?

## நாசகார சக்திகள் மீது வர்த்தகமந்திரி கண்டனம்

கொழும்பு, வியாழன்

**"மோசமான நிலைமையை சிருஷ்டித்து அரசாங்கத்தைக் கவிழ்க்க நாசகார சக்திகள் திட்டமிட்டு வருகின்றன" என்று வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின கூறினர்.**

கொழும்பு முதலியார் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க யூனியனுக்கு அஸ்திவாரக்கல் நாட்டுகையிலே அவர் இவ்வாறு கூறினர்.

"பிற்போக்குவாதிகள் தொழிலாளர்களையும் மத்திய வகுப்பினரையும் ஏமாற்றி அரசாங்கத்துக்கெதிராகக் கிளர்ச்சி செய்ய பெரும் தொகையான பணத்தைச் செலவழித்து வருகிறார்கள். ஆனல் இது பலனளிக்காது.

அரசாங்கம் தனிப்பட்டவரின் ஏகபோக உரிமையை ஒன்றன்பின் ஒன்ருக உடைத்து வருவது கண்டு, அதன் முன்னேற்றத் திட்டங்களைத் தடுக்க அநேக முட்டுக்கட்டைகளைப் பிற்போக்குவாதிகள் போட்டார்கள். இவற்றில் தோல்வியுறவே, தங்கள் நோக்கத்தைச் சாதிக்க நட்சத்திரங்களின் உதவியை அவர்கள் நாடினர்கள். ஆனல் துரதிருஷ்டவசமாகச் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் நட்சத்திரம நன்ருகயிருக்கிறதென ஜோஸ்யர்கள் பிற்போக்குவாதிகளுக்குக் கூறுகிருர்கள்.

இறுதியாக குழப்பத்தை உண்டாக்க அவர்கள் முயற்சித்து வருகின்றனர். நாட்டின் மீது பற்றில்லாதவர்கள் மீது அரசாங்கத்துக்கு அனுதாபம் கிடையாதென்பதை தெளிவாக்க வேண்டியிருக்கிறது" என்றும் திரு. இலங்கரத்தின குறிப்பிட்டார்.

## காங்கேசன்துறை துறைமுகத்தில் உணவுக் கப்பல்

### 500 தொழிலாளருக்கு வேலைகிடைத்தது

காங்கேசன்துறை, வியா.

காங்கேசன்துறை பட்டின சபையினதும், பொதுமக்களினதும் வேண்டுகோளுக்கு இணங்கி அரசாங்கம் ஓர் உணவுக் கப்பலை காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அனுப்பியுள்ளது.

எஸ். எஸ். அடோல்வ்லோட்டிஸ் என்னும் கப்பல் சுமார் 71000 மூடை பர்மா அரிசியுடன் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்து தற்பொழுது அரிசியை இறக்குமதி செய்துகொண்டிருக்கிறது. இத்துறைமுகத்தில் இறக்குமதி வேலைகள் மிகவும் வேகமாக நடைபெறுவதால் சராசரி ஒரு நாளைக்கு 8000 மூடைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இரண்டு வருடங்களுக்குப் பின் இதுவே வடமாகாணத்துக்குவந்துள்ளமுதல்கப்பலாகும். கடந்த இரு வருடங்களாக வேலையற்று இருந்த துறைமுகத் தொழிலாளருக்கு தற்பொழுது வேலை கிடைத்துள்ளது. சுமார் 500க்கு மேலான தொழிலாளர்கள் தற்பொழுது இறக்குமதி வேலையில் ஈடுபட்டுள்ளார்கள்.

## இலங்கை வங்கி புதிய டைரக்டர் சபை நியமனம்

கொழும்பு, வியாழன்

இலங்கை வங்கியின் புதிய டைரக்டர்களாக கீழ்க்கண்ட பிரமுகர்களை நிதி மந்திரி நியமித்திருக்கிருர்.

திரு. எச். வி. பெரேர, தலைவர் திரு. எரிக் லெப்ராய், திரு. கே. ஆழ்வாப்பிள்ளை, திரு. எஸ். ஸி பெர்னண்டோ தேசிய திட்ட டைரக்டர் திரு. பி. எச். சிறிவர்த்தன, திரு. ஷேர்லி அமரசிங்க ஆகியோர் இதர அங்கத்தினர்கள்.

## நிதி மசோதாவை கவர்னர் ஜெனரல் ஏற்ருர்

கொழும்பு, வியாழன்

பார்லிமெண்ட், செனட் ஆகிய இரு சபைகளாலும் அங்கீகரிக்கப்பட்ட நிதிமசோதாவை கவர்னர் ஜெனரல் இன்று ஏற்றுக்கொண்டார். இந்த மசோதாவின் கீழ் இலங்கை வங்கி தேசிய மயமாக்கப்பட்டது. இலங்கை வங்கியின் அந்தஸ்து, சுபிட்சம் ஆகியவற்றைப் பாதுகாக்க விரும்புவதாய் நிதிமந்திரிதிரு.பீலிக்ஸ் டயஸ் பண்டாரநயகா கூறினர்.

## குழந்தைகள் சினிமாப் பட நிலையம்

கொழும்பு, வியாழன்

தேசிய குழந்தைகள் சினிமாப்பட நிலையம் ஒன்று இலங்கையில் நிறுவப்படும்.

## தென்னபிரிக்கா வாபஸாகும்

நியூயோர்க், அக். 12

நேற்று ஐ. நா. பொதுச் சபை தென்னபிரிக்காவைக் கண்டித்து நிறைவேற்றிய தீர்மானத்தைத் தொடர்ந்து அந்நாடு சபையிலிருந்து வாபஸ் பெறுமெனத் தெரிகிறது. இது சம்பந்தமாக நமது அரசாங்கத்தின் உத்தரவை வெளிநாட்டு மந்திரி திரு. எரிக் பூலா எதிர்பாத்திருக்கிருர்.

## திரு. குணசேன டி' சொய்ஸா காலமானர்

### பிரிட்டனில் இலங்கை ஹைகமிஷனர்

கொழும்பு, வியாழன்

**பிரிட்டனில் இலங்கை ஹைகமிஷனராய்க் கடமையாற்றிய திரு. குணசேன டி' சொய்ஸா இன்று காலை மாரடைப்பால் காலமானர். அவருக்கு வயது 58.**

திரு. குணசேன டி'சொய்ஸா 1926-ம் ஆண்டு சிவில் சேவையில் சேர்ந்தார். அவரது மனைவியும், புதல்வனும், இரு புதல்விகளும் இப்போது பிரிட்டனில் இருக்கின்றனர்.

திரு. சொய்ஸா, 6 வருட காலம் பாதுகாப்பு - வெளிநாட்டு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாகக் கடமையாற்றினர்.

திரு. குணசேனடி' சொய்ஸாவின் மரணம் தங்களுக்கு திகைப்பைக் கொடுத்ததாய் லண்டனிலுள்ள இலங்கைத் தூதராலய அதிகாரிகள் கூறினர்.

திரு. சொய்ஸா நேற்று நள்ளிரவு துயில் கொள்ளச் சென்ருரென்றும், அவருக்கு எவ்வித சுகவீனமும் இருக்கவில்லை என்றும் அதிகாலை நித்திரையின்போது அவர் மரணமானர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

நாளை அவரது உறவினர்கள் பிரிட்டனுக்குப் புறப்பட்டுச் சென்று, அடுத்த திங்கட்கிழமை லண்டனில் அவரது ஈமச் சடங்கு பற்றிய ஏற்பாடுகளைக் கவனிப்பார்கள்.

## முரண்பாடாக சாட்சியம் அளித்தவருக்கு எச்சரிக்கை

### தனியூற்று கொலை வழக்கில் சம்பவம்

யாழ்ப்பாணம், வியாழன்

தனியூற்று கொலை வழக்கு நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா முன்னிலையில் இன்று மீண்டும் ஆரம்பமானது. மரியாம்பிள்ளை கந்தசாமி என்பவரை கோடரியால் வெட்டிக் கொன்றதாக செல்லப்பா செயலத்துரை என்பவர்மீது இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது.

கொலைச் சம்பவத்தை நேரில் கண்ட ஒரே சாட்சியான சுப்பர் வல்லிபுரத்தை வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கம் குறுக்கு விசாரணை செய்தபோது பொலிசாரிடமும். மாஜிஸ்ட்ரேட்டிடமும் கூறிய வாக்குமூலத்திலிருந்து அவர் மாறுபட்டார்.

இவ்விஷயத்தை அட்டோர்னி ஜெனரல் கையாள்வாரெனத் தாம் நம்புவதாய் நீதியரசர் தெரிவித்தார்.

சாட்சியிடம் நீதிபதி பின்வருமாறு கூறினர்.

"எதிரி மீது கொலைக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது என்பதை நீர் அறிவீர். உம்முடைய சாட்சியம் நம்பத்தக்கதாயிருந்தால் எதிரிக்கு மரணதண்டனை விதிக்கப்படும். உமது சாட்சியம் பொய்யாய் இருந்தால் உமக்கு 7 முதல் 8 வருட தண்டனை விதிக்கப்பட வேண்டும். கே. கந்தையா சாட்சியமளிக்கையில் பொலிசாருக்குத் தாம் இச்சம்பவம் பற்றி ஒரு வாக்குமூலம் அளித்ததாய்த் தெரிவித்தார். மற்றும் இருவர் சாட்சியமளித்த பின் வழக்கு மறுநாள்வரை ஒத்திவைக்கப்பட்டது.

## யாழ்ப்பாணத்தில் இ.போ.ச. ஜெனரல் மனேஜர்

### பஸ் தீக்கிரையானது பற்றி ஆராய விஜயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கைப் போக்குவரத்து சபையின் ஜெனரல் மனேஜர் திரு. டி. ஜி. தயாரத்ன, உபதலைவர் திரு. ஆர். நமசிவாயம் புதன் யாழ்ப்பாணம் வந்தனர். எவ்வித சந்தர்ப்பத்தில், இ.போ. ச. பஸ் ஒன்று தீக்கிரையானது என்பதையும் யாருடைய கவனக் குறைவினலாவது இச்சம்பவம் நடைபெற்றது என்பதையும் ஆராயவே அவர்கள் இங்கு வந்தனர்.

யாழ்ப்பாணத்தில் ஓடும் பழைய பஸ்களின் நிலைமை அதிருப்திகரமாய் இருப்பதாய் திரு. தயாரத்ன நமது நிருபரிடம் கூறினர்.

புதியபஸ்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படவேண்டுமென்று யாழ்ப்பாணம் முனிசிப்பல் சபை, கிராமக்கமிட்டிகள், பஸ் பிரயாணிகள் ஆகியோரால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தமக்கு அனுப்பப்பட்டதென்றும், இதன்படியே புதிய பஸ்களைத் தாம் யாழ்ப்பாணம் அனுப்பியதாயும் அவர் கூறினர். நாளை அவர்கள் கொழும்பு திரும்புவார்கள்.

## உத்தேச தேசிய கல்வி சபையின் அதிகாரம்

### கல்வி மந்திரி பரிசீலனை

கொழும்பு, வியாழன்

உத்தேச தேசிய கல்வி சபைக்கு கல்விக் கொள்கையை உருவாக்க அதிகாரம் அளிக்கப்பட வேண்டுமா என்னும் விஷயத்தை கல்விமந்திரி பரிசீலனை செய்து கொண்டிருக்கிருர்.

இத்தேசியக் கல்விச்சபை தலைசிறந்த கல்விமான்களையும், பலதரப்பட்ட துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களையும் கொண்டிருக்குமென்றும், நாட்டின் பொருளாதார தேவைக்கேற்ப கல்விக் கொள்கையை உருவாக்குவதற்கான வழியைச் செப்பனிடுமென்றும் தெரியவருகிறது.

நியூயோர்க், அக். 12

கடாங்காவில் தோன்றியுள்ள ஆபத்தான நெருக்கடியைத் தொடர்ந்து காங்கோ பற்றிய ஆலோசனைக்கமிட்டி நியூயோர்க்கில் கூடி ஆலோசனை நடத்தவிருக்கிறது. ஷோம்பேயின் படைப்பலம் வெகுவாக அதிகரித்துவருவதாயும், அந்நியர்களால் செலுத்தப்படும் 8, 9 போர்விமானங்கள் அவர் வசம் இருப்பதாயும் கூறப்படுகிறது.

## வரி விளம்பரம்


### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் அடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


## போக்குவரவு செலவை குறைக்க ஏற்பாடு

கொழும்பு, புதன்

நடப்பு நிதிவருடத்தில் அரசாங்க இலாகாக்களின் போக்குவரத்துச் செலவுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகையை நூற்றுக்கு 20 வீதம் குறைத்துவிடுவது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது சம்பந்தமாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எம். டபிள்யு. எப். அபெயக்கோன் பொலிஸ் பகுதியின் போக்குவரத்துச்செலவுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகையைக் குறைத்துவிடுவதற்கு ஒழுங்குகள் செய்து வருகிறார். பிரஸ்தாப தேவையில் பணம் செலவாகுவதை நன்குகுறைக்க வேண்டியது அவசியம் எனப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் வலியுறுத்தியுள்ளார். இவ்விஷயம் பற்றி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் மேலும் கூறியுள்ளதாவது:

வாழ்க்கைச்செலவு ஏற்கெனவே அதிகமாகையால் அரசாங்க ஊழியர்களின் போக்குவரத்துக்கு உதவிவரும் பணத்தையும் குறைத்துக்கொள்வது சரியல்ல என்பதை நான் அறிவேன். ஆனால் இன்றைய நிதிநிலைமை காரணமாக அரசாங்க சேவையாளர்கள் நாட்டின் நலன் கருதி தமது சொந்த சௌகரியங்களையும் தியாகம் செய்யவேண்டியது,அவர்களது கடமையாகின்றது."

பலவகைகளிலும் செலவுகளைக் குறைத்துக்கொள்ளலாம் எனப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆலோசனை கூறுகிறார்.

அவர் மேலும் கூறுவதாவது என் விருப்பத்திற்கும் மாறாக இந்தக் கொடூரமான நடவடிக்கையை நான் எடுத்துக்கொள்ளவேண்டியது பற்றி அதிகம் கவலைப்படுகின்றேன். ஆனால் இவ்வாறு செலவுகளைக் குறைத்துக் கொள்வதைவிட வேறு வழி எதுவும் இல்லை. எனக்கு ஏற்பட்டுள்ள கஷ்டத்தை உணர்ந்து மக்கள் எல்லோரும் என்னுடன் ஒத்துழைப்பார்கள் என நம்புகிறேன்.

மேற்படி நடவடிக்கை தற்காலிகமானதென்றும், நாட்டின் நிதி நிலைமைகள் நன்றாகியதும் திருமபவும் இத்தேவைகளுக்குப் பெருந்தொகையாகப் பணம் ஒதுக்கப்படும் என்றும் நான் உறுதி கூறுகின்றேன்."

செலவுகளைக் குறைத்துக் கொள்வதற்குப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் சில வழிவகைகளைக் கையாளும்படி பொலிஸாருக்குக் கூறியுள்ளார்.

## ரூ. 25 ஆயிரம் பெறுமதியான நெல்

அநுராதபுரம், புதன்

பதவியா குடியேற்றத் திட்டத்தின் பல நோக்குக் கூட்டுறவுத் தாபனத்தில் இருபத்தையாயிரம் ரூபாய் பெறுமதியான நெல் காணமற் போனதாகத் தெரியவந்துள்ளது. அநுராதபுரம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஏ. சி. எம். தாஹிர் இதுபற்றிப் புலன் விசாரணை செய்துவருகிறார்.

கடந்த சில மாதங்களில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 25 நிர்வாகிகள் குருநுப்பலாட்ட வடக்கு, நுவரகம்பலாட்ட கிழக்கு ஆகிய இடங்களிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டனர். கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. டி. பி. மடுவா நடத்திய புலன் விசாரணையின் பேரில் இந்த 25 நிர்வாகிகளும் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

# "சிங்கள மக்களுடன் எமக்கு சண்டையில்லை"

## வரவேற்பு உபசாரத்தில் திருமலை எம். பி. பேச்சு

திருக்கோணமலை, செவ்.

"அவசரகாலச் சட்டமும்,தமிழரசுக் கட்சி மீது விதிக்கப்பட்ட தடையும் இன்னும் அமுலில் இருக்கிறது. எனவே நான் அரசியல் பற்றி எதுவும் பேசுவதற்கு விரும்பவில்லை. நாம் வாங்கும் உணவுப் பொருள்களான அரிசியும் கருவாடும் கூட அரசியலில் கலந்து விட்டது."

இவ்வாறு தடுப்புக்காவலிலிருந்து விடுதலை பெற்றுத் திரும்பிய திருக்கோணமலை எம்.பி. திரு.என். ஆர். இராஜவரோதயம் சென்ற ஞாயிற்கிழமை கன்னியாயில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினர்.

கன்னியாய் கிராம முன்னேற்றச் சங்கம், இளம் விவசாயிகள் சங்கம், வாலிபர் சங்கம், மாதர் சங்கம் ஆகியவைகளால் கூட்டாக இந்த வரவேற்புபசார மளிக்கப்பட்டது.

கன்னியாய் சந்தியிலிருந்து ஊர்வலமாக திரு. இராஜவரோதயம் கூட்டம் நடைபெற்ற இடத்துக்கு அழைத்துவரப்பட்டார்.

"எனக்கோ அல்லது மற்றவர்களுக்கோ தொந்தரவு ஏற்படுத்திக்கொள்ள நான் விரும்பவில்லை. எனவே, அரசியலைப் பற்றிப் பேசவிரும்பவில்லை" என்று கூறிய திரு. இராஜவரோதயம் மேலும் கூறியதாவது:-

எமக்கு கிடைக்க வேண்டிய நியாயமான கோரிக்கைகளையே நாம் கோரினோம்.

தடுப்புக் காவலில் இருந்தது பற்றி நாம் கவலைபடத் தேவையில்லை. அரசாங்கம் இவ்விதம் செய்யும் என்பது எமக்கு முன்னரே தெரியும். நாம் தடுப்புக்காவலில் இருந்தபோது எமக்கு ஒருவித குறையுமின்றி நன்கு கவனித்தார்கள்.

எங்களுக்கு உணவுபரிமாறியவர்களில் அதிகமானோர் சிங்களவர். இருவர் வெலிக்கடை சிறைக்கைதிகள். உறவினர்களை விட அவர்கள் நன்றாக எம்மைப் பேணினர்கள். அவர்கள் மிக நேர்மையானவர்களாகவும் நடந்துகொண்டார்கள்.

சிறைக்கு வெளியே தான் நேர்மையற்றவர்களும் குள்ளநரிக்குணம் படைத்தவர்களும் அதிகம் இருக்கிறார்கள் என்ற அபிப்பிராயம் இதிலிருந்து எனக்கு ஏற்பட்டது.

நாம் உரிமைக்காக எவ்வித நடவடிக்கை எடுத்தாலும் சிங்கள மக்களுடன் எதுவித சண்டையும் செய்யமாட்டோம். இப்பொழுது நிலவியுள்ள துன்பகரமான நிலைக்குக் காரணம் பதவிமோகம் கொண்டுள்ள அரசியல்வாதிகளே. எமது போராட்டத்தில் சிங்கள மக்களும் ஒத்துழைப்பார்கள் என நான் திண்ணமாக நம்புகின்றேன்.

திரு. இராஜவரோதயத்துக்கு பணமுடிப்பு ஒன்று கன்னியாய் வாசிகளின் சார்பில் திரு. எஸ். கந்தையாவால் அளிக்கப்பட்டது.

## தபாற்காரர் மீது அதிருப்தி

காலி, புதன்

இங்குள்ள பலர் தபாற்கந்தோருக்குச் சென்று தமக்குரிய கடிதங்களைப் பெற்றுக்கொள்கிறார்கள். தபாற்காரர்கள் அவர்களுக்குரிய கடிதங்களை அவர்களுக்கு விநியோகம் செய்யாது போய்விடுவதே இதற்குக்காரணம்.

தபாற்காரர்கள்பற்றி இங்குள்ளவர்களுக்கு பெரும் அதிருப்தியே இருந்துவருகிறது.

தபாற் கந்தோர்மூலம் அனுப்பப்படும் உணவுப் பார்சல்கள் உணவில்லாமலே விலாசதாரர்களுக்கு கிடைப்பதாக இவர்கள் புகார் செய்துள்ளனர்.

சாதாரண கடிதங்களை 'அவ்வித விலாசம் தெரியவில்லை' என்று காரணம் கூறி உரியவர்களிடம் சேர்க்காது தபாற் கந்தோரிலேயே சேர்த்துவிடுகின்றார்களாம் தபாற்காரர்கள்.

அக்டோபர் 5-ம் திகதி 'பட்டர்பீலை' பாலத்துக்கருகில் 27 காலி மாநகரசபைக் கடிதங்கள் மறைக்கப்பட்டிருந்ததை ஒருவர் கண்டுபிடித்தார். மின்சாரப்பணம் செலுத்தாதவர்களுக்கு இந்தக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்ததாம்.

காலி மாநகரசபை கமிஷனர் திரு. கே. சண்முகம் இது விஷயமாக தபால் அதிகாரிகளுக்குப் புகார் செய்துள்ளார். இது சம்பந்தமாக ஒரு விசாரணை நடைபெற்று வருகிறது.

## குருபூசை

யாழ்ப்பாணம், வியாழன்

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தில் சந்தான குரவருள் ஒருவரான அருணந்தி சிவாசாரியார் குருபூசை கொண்டாடப்பட்டது. திரு. ஆ. தில்லைநாதன் தலைமை வகித்தார். திரு. சி. வரதராசா. திரு. சி. முருகமூர்த்தி, திரு. சி. நடராசா, உட்பட வேறும் பலர் பேசினர்.

## யுவதிமீது பலாத்காரம் புரிந்தவர் எச்சரித்து விடுதலை

மாவிட்டபுரம், வியா.

"பெண்கள் தைரியத்தில் குறைந்தவர்கள். ஆனபடியால் அவர்களிடம் நீ சென்று உனது கெட்டித்தனத்தைக் காட்டுவது சரியல்ல. உன்னைப்போல் சமமான தைரியம் கொண்டவர்களுடன் உனது தைரியத்தைக் காட்டியிருந்தால் அவன் உனக்கு நல்ல பாடம் கற்பித்திருப்பான். பொதுவாக நான் உனக்குத் தரும் எச்சரிக்கை என்னவெனில் பெண்களுக்கும், ஆண்களுக்கும், சிறுபிள்ளைகளுக்கும் ஒரு தொந்தரவும் செய்யாதே."

இவ்வாறு ஏழாலையைச் சேர்ந்த கந்தையா என்பவரின் மகள் அன்னப்பிள்ளை என்னும் யுவதிமேல் அதே ஊரைச் சேர்ந்த கந்தையா செல்லையா என்பவர் பலாத்காரம் உபயோகித்துக் காயம் உண்டு பண்ணியதாக குற்றஞ்சாட்டி சுன்னாகம் பொலிசாரால் மல்லாகம் நீதி மன்றத்தில் தொடரப்பட்ட ஓர் வழக்கில் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் எதிரியை எச்சரித்து விடுதலை செய்கையில் கூறினர்.

# ஊழியரின் சலுகை பறிக்கப்படுகிறது

— காலி எம். பி

காலி, புதன்

ஆஸ்பத்திரி ஊழியர் முன்னர் அனுபவித்துவந்த சலுகைகளையெல்லாம் இப்பொழுது ஒவ்வொன்றாக இழந்துகொண்டிருக்கின்றனர் என காலி எம். பி. திரு. டபிள்யு. தகநாயக்கா அகில இலங்கை ஆஸ்பத்திரி அரசாங்க ஊழியர் சங்கத்தின் காலி கிளைச் சங்க வருடாந்தக் கூட்டத்திற் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:

காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்கா சுகாதார மந்திரியாக இருந்தபோது தற்காலிக ஊழியர் தொடர்ந்து 300 நாட்கள் சேவைசெய்தால் அவர்கள் நிரந்தர ஊழியர்களாக்கப்பட வேண்டுமென சட்டமியற்றியிருந்தார்.

ஆனால் இந்த விதி இப்பொழுது அமுலாக்கப்படுவதில்லை. நானூறு நாட்களுக்குமேல் சேவை செய்த தற்காலிக ஊழியர்கள்கூட நிரந்தரமாக்கப்படவில்லை. இந்த ஊழியர்களுக்கு தொடர்ந்து 13 நாட்களுக்குமேல் வேலை வழங்கப்படுவதில்லை. இது மிக மோசமான நிலையாக இருக்கிறது. இந்தப் பதின்மூன்றுநாள் வேலைக்கு ஒரு தொழிலாளருக்கு சுமார் 43 ரூபாய் சம்பளம் வழங்கப்படுகிறது. ஒரு மாதத்துக்கு இவ்வளவு தொகை ஒரு தொழிலாளருக்குத் தமது உணவைத் தேடிக்கொள்ளவே போதாது.

சுகாதார மந்திரியிடம் இது விஷயம்பற்றி நான் தெரிவித்தபோது அவரிடம்கூட இது பற்றி ஆலோசிக்கப்படவில்லை என்றும் திறைசேரி சுகாதார இலாகாவுக்கு இந்த விதியை அமுல்நடத்துமாறு உத்தரவிட்டுள்ளதாகவும் தற்காலிக ஊழியர் நிரந்தர ஊழியராக்கப்படாது தடுக்கவே இந்த ஏற்பாடு செய்திருப்பதாகவும் அறிந்தேன். இது மிக மோசமான தொரு செய்கை.

**மாவு**

திரு. தகநாயக்கா மா விலையேற்றத்தைப் பற்றிக் குறிப்பிட்டதாவது:

மா, சீனி போன்ற உணவுப் பொருள்களின் விலையேற்றம், நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவின் கொள்கைக்கு எவ்வளவு முரணாக நடந்து கொள்கிறார் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

காலஞ் சென்ற பிரதமர் சீனியின் விலையைக் குறைத்ததோடு அரிசியின் விலையையும் குறைத்தார்.

தாய்ச் சங்கத்தின் காரியதரிசி திரு. டி. எம். கருணதாசா பேசியதாவது:

"சம்பளக் கமிஷனை சிங்களத்தில் வெளியிடாது பெட்டிக்குள் பூட்டி வைத்திருப்பது முறையற்ற செயல். வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளதால் ஆஸ்பத்திரி சங்க ஊழியர் மற்றவர்களுடன் சேர்ந்து பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கின்றனர். வாழ்க்கைச் செலவைக் குறைப்பது அரசாங்கத்தின் மிகப் பெரிய கடமை.

தாய்ச் சங்கத்தின் தலைவர் திரு எஸ். வீரசிங்கி தலைமை தாங்கினர்.

## நவராத்திரி கலைவிழா

குரும்பசிட்டிசன்மார்க்கசபை மண்டபத்தில் வருகிற 14-ந் திகதி மாலை 6-30க்கு நவராத்திரி கலைக் கலைவிழா நடைபெறும். சன்மார்க்க நாடக மன்றத்தினரால் நடத்தப்படும் இவ்விழாவுக்கு வடபகுதி வித்தியாதிபதி திரு. எஸ். யு. சோமசேகரம் தலைமை வகிப்பார். தேவாரம், பேச்சு, பரதநாட்டியம், சரித்திர நாடகம், கும்மி, புராண நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன.

## பாடசாலை கல்வி சுற்றுப்பிரயாணம்

யாழ்ப்பாணம், வியாழன்

அல்வாயூர் ஸ்ரீலங்கா வித்தியாசாலை உயர் வகுப்பு மாணவர்களும் ஆசிரியர்களும் வடமாகாணக் கல்விச் சுற்றுப் பிரயாணமொன்றை மேற்கொண்டிருந்தார்கள்.

இவர்கள் இங்குள்ள சரித்திரப் பிரசித்திபெற்ற இடங்களையும், தொழில் நிலையங்களையும் பார்வையிட்டனர்.

## 'அரசியல்கலப்பற்ற தொழிற்சங்கம்'

மத்துகாமம், புதன்

'தேசிய தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் கலப்பற்ற ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்கத் தீர்மானித்துள்ளது.

இந்தச்சங்கத்தில் அங்கத்தவர்களாக இருப்பவர்கள் தாம் விரும்பிய அரசியல் கட்சிக்கு ஆதரவளிக்கும் உரிமை உடையவர்கள்.

அங்கத்தவர் ஒருவரை அவரது விருப்பத்துக்கு மாறாக குறிப்பிட்ட ஒரு கட்சியில் சேருமாறு சங்கம் வற்புறுத்தமாட்டாது.

இவ்வாறு தேசிய தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் திரு. டபிள்யு. கே. விஜயமன்ன தெரிவித்தார்.

தோட்டக்கமிட்டித் தலைவர்களையும், காரியதரிசிகளையும் கொண்ட கூட்ட மொன்றில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினர். அவர் மேலும் கூறியதாவது:-

'தேசிய தொழிலாளர் காங்கிரஸ்காரர் யு. என். பி. கட்சியின் ஏஜண்டுகள்என பொய்ப் பிரசாரம் பரப்பப்பட்டு வருகிறது. ஆனால் யு. என். பி. யுடனோ வேறு எந்த அரசியல் கட்சியுடனோ காங்கிரஸுக்கு எந்தவிதமான தொடர்புமில்லை. தொழிலாளர் இந்தவித விஷமப் பிரசாரத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

சிங்களவர் தமிழர் என்ற பாகுபாடின்றி எல்லோரும் இலங்கையர் என்று எண்ணி நமது லட்சியத்தை அடையப் பாடுபடவேண்டும்.'

## லஞ்சக்கமிஷன் நவம்பரில் கூடுகிறது

கொழும்பு, புதன்

நகரசபை லஞ்சக்கமிஷன் நவம்பர் மாதத்தில் பகிரங்கமாகக் கூடவிருக்கிறது.

லஞ்சக்கமிஷனின் கூட்டங்கள் சம்பந்தமான ஆரம்ப அலுவல்களைக் கமிஷனர் திரு. ஜி. ஈ. சிட்டி கியூ. ஸி., ஏற்கெனவே செய்து முடித்து விட்டார்.

கொழும்பு மாநகரசபையைச் சேர்ந்தவர்களுக்கெதிரான இருபது குற்றச்சாட்டுகள் கமிஷனுக்கு ஏற்கெனவே அனுப்பப் பட்டுள்ளன.

## இலங்கை கிரிக்கட் வீரர் ஆங்கிலமாதை மணம் செய்வார்

ஸிட்னி, அக். 11

இலங்கை கிரிக்கட் விளையாட்டு வீரர் திரு காமினி குணசேன செல்வி பிலிப்பா டக்கிளாஸ் றொபேர்ட்சன் என்ற ஆங்கிலப் பெண்ணை வரும் சனிக்கிழமை திருமணம் செய்து கொள்வார்.

# தென்னாபிரிக்க மந்திரியின் உரைக்கு

# ஐ. நா. கண்டனம்

## லைபீரிய பிரதிநிதியின் பிரேரணை நிறைவேறியது

நியுயோர்க், அக். 12

தென்னாபிரிக்க வெளிவிவகார மந்திரி எரிக்லோவையும் அவர் நிகழ்த்திய உரையையும் ஐ. நா. மகாசபை நேற்று கண்டித்தது.

தென்னாபிரிக்க வெளிவிவகார மந்திரி திரு. எரிக்லோ நேற்று ஐ. நா. சபையில் பேசுகையில் தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கை சரியானதென்று கூறி அதற்கு விளக்கமும் கொடுத்தார். அமெரிக்க, பிரிட்டிஷ் பத்திரிகைகள் தென்னாபிரிக்கக் கொள்கைக்கு எதிராக உலகத்தில் கிளர்ச்சியைத்தூண்டிவிட முயற்சி செய்வதாக அவர் குறிப்பிட்டார்.

எரிக்லோ உரை நிகழ்த்தி முடிந்ததும் லைபீரிய பிரதிநிதி பேசினார். எரிக்லோவின் பேச்சு ஐ. நா. ஸ்தாபனத்தையே அவமதிப்பதாகுமென்றும் ஆபிரிக்கர்களைக் கேவலப்படுத்துவதாக உள்ளதென்றும் கூறிய லைபீரிய பிரதிநிதி எரிக்லோவின் பேச்சு ஐ. நா. தஸ்தாவேஜுகளில் இடம் பெறக்கூடாதென்றும் சொன்னார்.

பின்னர் இந்த யோசனையை லைபீரியப் பிரதிநிதி மாற்றிக்கொண்டு எரிக்லோவின் உரையை மகாசபை கண்டிக்கிறது என்னும் பிரேரணையைக் கொண்டுவந்தார்.

இப்பிரேரணைக்கு சாதகமாக 67 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் கிடைத்து நிறைவேறியது.

ஐ. நா. இப்படி ஒரு கண்டனப் பிரேரணையைநிறைவேற்றியது இதுதான் முதல்தடவை.

### ஹமர்ஷீல்ட் மரணத்தின் காரணம்

#### சர்வதேசக் கமிஷன் நியமிக்கும் பிரேரணை

நியுயோர்க், அக். 12

ஐ. நா. பொதுக் காரியதரிசி திரு. ஹமர்ஷீல்ட் மரணமடைந்த காரணம்பற்றி சர்வதேச விசாரணைக் கமிஷன் ஒன்று விசாரணை நடத்தவேண்டுமெனக் கோரி இந்தியாவும் மற்றும் ஆறு நாடுகளும் கொண்டுவந்துள்ள பிரேரணையை மகாசபைக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஐ. நா ஆயத்தக் கமிட்டி ஏகமனதாக சிபார்சு செய்துள்ளது.

---

### மேனன் உடல்நிலை

நியுயோர்க், அக். 12

மூளைக்கு வெளியே உறைந்திருந்த இரத்தக்கட்டியை சத்திர சிகிச்சைமூலம் நீக்கியபிறகு இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. கிருஷ்ணமேனன் இப்பொழுது குணமடைந்து வருகிறார். இன்னும் இரண்டு தினங்களில் அவர் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறிவிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

---

### காலனி ஆதிக்கம்

#### ஒழிப்பதற்கு ரஷ்யா தீர்மானம்

நியுயோர்க், அக். 11

உலகில் காலனி ஆதிக்க முறையை அடுத்தஆண்டுக்குள் அடியோடு ஒழித்துவிடவேண்டுமென்று கோரும் தீர்மானமொன்றை சோவியத் ரஷ்யா ஐ. நா. சபையில் கொண்டு வந்துள்ளது.

இத்தீர்மானத்தை செயல்படுத்துவதற்கு மேற்கு,கிழக்கு, நடுநிலைமை நாடுகளைக்கொண்ட ஒரு கமிஷனையும் நியமிக்க வேண்டுமென்று ரஷ்யா கோரியுள்ளது.

---

### முயற்சி தோல்வி

நியுயார்க், அக். 11

திரு. ஹமர்ஷீல்டின் மறைவினால் காலியான ஐ. நா. பொதுக் காரியதரிசி பதவிக்கு ஒருவரை நியமிப்பது சம்பந்தமாக கிழக்கு - மேற்குநாடுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை நீக்குவதற்கு அமெரிக்கப் பிரதிநிதியும் சோவியத் பிரதிநிதியும் எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன.

---

### சைகோனில் வெள்ளம்

சைகோன், அக். 12

தென் வியட்னாமில் பல இடங்களிலும் பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளது.பல மாகாணங்களில் வீடுகளும் பயிர்களும் சேதமடைந்துள்ளன.

# இந்தியாவுக்கு தூதுகோஷ்டி

## இலங்கையிலிருந்து அதிக பொருள் வாங்குமாறு கேட்கும்

கொழும்பு, புதன்

இலங்கையின் உற்பத்திப் பொருள்களாகிய ரப்பர் முதலிய பொருட்களை இலங்கையிடமிருந்து அதிகம் வாங்குமாறு இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் நோக்கத்தோடு உணவு வர்த்தக கப்பல் போக்குவரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன தலைமையில் ஒரு வர்த்தக தூதுகோஷ்டி வரும் ஞாயிற்றுக்கிழமை இந்தியா செல்லவிருக்கிறது.

இத் தூதுகோஷ்டியில் நிரந்தரக் காரியதரிசி திரு. கே ஆழ்வாப்பிள்ளை, வர்த்தக போக்குவரத்து உதவிக் காரியதரிசி திரு. ஜே. பி. கெலகமா, வர்த்தக டைரக்டர் திரு. ஜி. ஆர். டபிள்யு. டி' சில்வா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

தேங்காய் எண்ணை, கொப்பரா, தேங்காய் துருவல், பாக்கு ஆகிய பொருட்களையும் அதிகம் வாங்குமாறு தூதுகோஷ்டி கேட்டுக்கொள்ளும்.

### டில்லியில் போலந்து ஜனாதிபதி

புதுடில்லி, அக். 11

போலந்து ஜனாதிபதி 3நாள் இந்திய விஜயத்தை மேற்கொள்ளும் பொருட்டு இன்று காலை புதுடில்லி வந்து சேர்ந்தார்.

---

### கல்வி இலாகா புதிய திட்டம்

கொழும்பு, வியாழன்

வித்தியாதிபதியின் கீழுள்ள பாடசாலைகளில் மாணவர்கள் சேர்வது சம்பந்தமாக கல்வி இலாகா ஒரு புதிய திட்டத்தை தயாரித்து வருகிறது.

தேசிய கல்விக் கமிஷனுக்கும் இத்திட்டத்துக்கும் தொடர்பிருக்காது என கல்வி இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# கென்னடியின் இராணுவ ஆலோசகர் சைகோன் செல்கிறார்

வாஷிங்டன், அக். 12

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் இராணுவ ஆலோசகர் ஜெனரல் மாக்ஸ்வெல் டெய்லர் இவ்வாரம் சைகோனுக்குச்சென்றுதென்வியட்நாம் அதிபர் நிகோ-டின்-டியத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

"தென்வியட்நாம் மக்கள்மீது கம்யூனிஸ்ட்டுகள் தொடர்ந்து தாக்குதல் நடத்திவருவது தென்வியட்நாம் குடியரசுக்கும் தென்கிழக்காசியாவுக்கும் அபாயத்தை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது. தென் வியட்நாம் குடியரசின் நிலைமை அமெரிக்காவுக்குக் கவலையைக் கொடுத்துள்ளது. எனவே தென்வியட்நாம் குடியரசைப் பாதுகாப்பதற்கு என்ன முறையில் நாங்கள் உதவிபுரியலாம் என்பதை ஆராய்ந்தறிந்துவருவதற்கு எனது இராணுவ ஆலோசகர் ஜெனரல் மாக்ஸ்வெல் டெய்லரை இவ்வாரம் சைகோனுக்கு அனுப்பவிருக்கிறேன்" என்று ஜனாதிபதி கென்னடி நேற்று பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

---

### மருந்து இறக்குமதிக்கு புதிய இலாகா

கொழும்பு, வியாழன்

மருந்து வகைகளை இறக்குமதி செய்வதற்கெனக்கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் வெகுவிரைவில் ஒரு புதிய இலாகாவை ஆரம்பிக்கவிருக்கிறது. இப்பகுதி நிர்வாகங்களைக் கவனிப்பதற்கான அதிகாரி ஏற்கெனவே தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கோட்டை 'பிரின்ஸ்' வீதியிலுள்ள கூட்டுறவு மொத்தவிற்பனவுபபண்டகசாலையின் மனேஜரே இந்த அதிகாரியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கூட்டுறவு மொத்தவிற்பனவு தாபனத்தின் உரம், கருவாடு ஆகிய பகுதிகளுக்கு இப்போது டைரக்டராக இருந்து வரும் திரு. டி. எல். டபிள்யு. ராஜபக்ஸேயின் கண்காணிப்பில் புதிய மருந்துப்பகுதி தொழிற்பட்டுவரும்.

---

### பீகிங்கில் பர்மிய பிரதமர்

பீகிங், அக். 11

பர்மிய பிரதமர் யுநூ. இன்று பீகிங் வந்து சேர்ந்தார்.

### குரோமிக்கோ மாஸ்கோ திரும்பினார்

லண்டன், அக் 12

பேர்லின் சம்பந்தமாக ஒரு யுத்தம் ஏற்படக்கூடாது என்று சோவியத் வெளிவிவகார மந்திரி திரு. குரோமிக்கோவும் பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி ஹியூம் பிரபுவும் ஒப்புக்கொண்டனர்.

அமெரிக்க ஜனாதிபதியுடனும் பிரிட்டிஷ் பிரதமருடனும் பேர்லின், ஜெர்மனிபற்றிப் பேச்சுவார்த்தை நடாத்திவிட்டு சோவியத் வெளிவிவகார மந்திரி திரு. குரோமிக்கோ மாஸ்கோ போய்ச் சேர்ந்துவிட்டார்.

---

### டிகோல்-அடினார் பேச்சுவார்த்தை

பாரிஸ், அக். 12

மேற்கு ஜேர்மன் அதிபர் டாக்டர் அடினாரும் பிரஞ்சு ஜனாதிபதி ஜெனரல் டிகோலும் நேற்று இங்கு சந்தித்துப் பேர்லின், ஜேர்மன் பிரச்னைகள்பற்றி ஆராய்ந்தனர். இப் பேச்சுவார்த்தைகளில் மேற்கு ஜேர்மன் நிதி மந்திரியும் கலந்துகொண்டார்.

இதேசமயம் மேற்கு ஜேர்மன் வெளிவிவகார மந்திரியும் பிரெஞ்சு வெளிவிவகார மந்திரியும் தனியாகப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

---

### ஆயுதங்கள் வாங்க ஷோம்பே முயற்சி

லியப்போல்ட்வில்லி, அக். 12

வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்கள் வாங்குவதற்கு கடாங்கா அதிபர் சோம்பே 24 கோடி பிராங்குகள் செலவிட்டுள்ளாரென்று கூறப்படுகிறது. ஷோம்பேக்கு இந்தப் பணம் கொடுத்தவர்கள் யாரென்பது காங்கோ மத்திய அரசாங்கத்துக்குத் தெரியுமென்றும் ஆனால் அந்த விபரத்தை வெளியிட விரும்பவில்லை யென்றும் அறிவிக்கப்பட்டது.

---

### பிரிட்டன் அங்கீகரிக்கும்

லண்டன், அக். 11

சிரியாவின் புதிய அரசாங்கத்தை இன்னும் சில தினங்களில் பிரிட்டிஷ் அரசாங்கம் அங்கீகரிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தோனேஷியாவும் ஈராக்கும் சிரியாவை அங்கீகரித்துள்ளன.

# களஞ்சியம் அமைக்க ரூ. 11 லட்சம்

## புராதன சுவடிகளை பாதுகாக்க முயற்சி

கொழும்பு, வியாழன்

பழைய ஏடுகளையும், நூல்களையும் சாசனங்களையும் பாதுகாப்பதற்கெனக் கொழும்புக்கு அண்மையில் ஒரு களஞ்சியம் அமைக்கப்படல் வேண்டும். இதுவே எமது இலாகாவின் அவசர தேவையாகும். இப்போதுள்ள சாசன ஏடுகள் யாவற்றையும் அடக்கக்கூடியதாகவும் பிற்காலத்தில் விஸ்தரிக்கக்கூடியதாகவும் இக் களஞ்சியம் அமைக்கப்பட வேண்டும்."

இவ்வாறு பழைய ஏடுகள் நூல்கள் பாதுகாப்பு சம்பந்தமான 1960-ம் ஆண்டு நிர்வாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

புதிய களஞ்சியம் ஒன்றைக் கொழும்பில் நிறுவுவதுபற்றி அவ்வறிக்கை கீழ்வருமாறு கூறுகிறது.

களஞ்சியம் அமைப்பதற்குச் சுமார் 11 லட்சம் ரூபாய் செலவிடப்படும். கங்கொடவிலா நுகெகொடாப் பகுதியில் களஞ்சியம் அமைக்கப்படும். களஞ்சியம் குளிர்சாதன வசதிகளுடன் அமைக்கப்படவேண்டும்.

### கைதடி பகுதியில் கலால் அதிகாரிகள் தீவிரம்

கைதடி, செவ்வாய்

கைதடிப்பகுதியில் இதுவரையும் கள்ளச்சாராய விற்பனையும், லைசென்ஸ் இல்லாமல் தென்னை, பனை மரங்களில் கள்ளுச் சேர்த்தலும், உத்தரவு இல்லாமல் கொட்டில்கள் வைத்து கள் விற்பனை செய்தலும் அதிகரித்து இருந்தன. இதனையறிந்த பருத்தித்துறை காலால் சுப்பிறின்டென்ற் தனது அதிகாரத்தின் கீழுள்ள அச்சுவேலி, பருத்தித்துறைப் பகுதிகளிலுள்ள சார்ஜென்ட், 'கார்ட்' மாருடன் சென்ற சில நாட்களாக எடுத்த தீவிர முயற்சியின் பயனாக ஏராளமான கள்ளச் சாராயமும், கள்ளும் கைப்பற்றியிருக்கிறார்கள். அல்லாமலும் உத்தரவில்லாமல் கள்ளுச் சேர்த்த நூற்றுக்கணக்கான மரங்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். கைதடிச் சந்திப் பகுதியில் அடிக்கடி நிகழும் சண்டைகளுக்கும், குழப்பங்களுக்கும் கைதடிச் சந்தியில் ஏராளமான 'கசிப்பு' விற்பனையும், சட்டவிரோதமான கள்ளுக் கொட்டில்களும் தான் காரணமென்பதை அரசினர் இப்போது உணர்ந்துவிட்டனர். அப்பகுதிக் கிராமசபையும் நடவடிக்கை எடுக்க முன் வந்துள்ளது.

---

### சீனா அங்கீகரித்தது

பீகிங், அக். 11

சுதந்திர சிரியா அரசாங்கத்தை சீனா அங்கீகரித்துவிட்டது. ராஜதந்திர உறவை ஏற்படுத்திக் கொள்ளவும் அது தீர்மானித்திருக்கிறது

---

### கதிரேசன் கல்லூரியில் நவராத்திரி விழா

நாவலப்பிட்டி, வியாழன்

நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் நவராத்திரி விழா தொடக்கி வைக்கப்பட்டது. ஒன்பது தினங்களாக நடைபெறவிருக்கும் இவ் விழாவில் கல்லூரி மாணவர்களின் ஆடல் பாடல்கள் முக்கிய இடம் பெறுமென தெரிகிறது. திரு. நா. முத்தையா கல்லூரியில் நவராத்திரி விழாவை தொடக்கி வைத்து நவராத்திரியின் மகத்துவம் பற்றி விளக்கிக் கூறினார். கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெற்றது.

## மணி வாக்கு

மனிதன் இயற்கையை வெல்வதற்காகப் பிறந்தானேயொழிய அதனைப் பின் பற்றிச் செல்வதற்கல்ல.

—விவேகானந்தர்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு புரட்டாசி மீ 27 உ (13-10-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## கீரிமலை

கீரிமலைக் கடலிலே ஸ்நானம் செய்ய போதிய வசதிகளைச் செய்யவேண்டுமென்று ஓர் அன்பர் எழுதியுள்ள முக்கிய கடிதத்தை வேறோர் இடத்தில் வெளியிட்டிருக்கிறோம். அவர் குறிப்பிட்டிருப்பதுபோல், கீரிமலை, பொதுவாக இலங்கைக்கும் சிறப்பாக யாழ்ப்பாணத்துக்கும் இயற்கை அன்னையால் அருளப்பெற்ற வனப்பு மிக்க இடமாகும். இவ்விதமான ஓர் இடம் ஐரோப்பாவிலோ அமெரிக்காவிலோ இருந்திருப்பின், அது இந்திரலோகம் போல் அபிவிருத்தி செய்யப்பட்டு, உலக யாத்திரிகர்களை வசீகரிக்கும் இடமாக மாற்றப்பட்டிருக்கும்.

இலங்கையின் வட கோடியிலே உள்ள இடமென்றோ என்னவோ கீரிமலை எவ்விதத்திலும் அபிவிருத்தி செய்யப்படாமல் இதுவரை புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது இது துரதிருஷ்டமாகும். வெளிநாட்டு யாத்திரிகர்களை இங்கு வசீகரிக்கும் விளம்பரங்களிலே கண்டி நடனம், பல்லுக்கோவில், பாழான நகரம், யானை சர்க்கஸ் இப்படங்களே போடப்படுகின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே இயற்கை வனப்பு மிக்க இடங்களும், சுகாதாரமான ஸ்தலங்களும் இருப்பது யாத்திரை இலாகாவிலுள்ளவர்களுக்கே தெரியாது போலும். இன்றேல் ஏன் இப்பகுதிகளை இப்படி அலட்சியப்படுத்தி ஒதுக்க வேண்டும்? பாழான இடங்களைப் பார்ப்பதைவிட அழகான சுகாதாரமான இடங்களுக்கு வரவே மக்கள் விரும்புவர்.

நாட்டின் அபிவிருத்தியைப் பற்றிப் பேசப்படுகிறது. இதற்காக வரிகளும் விதிக்கப்படுகின்றன. இந்த வரிகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு, கீரிமலை போன்ற இடங்களை அபிவிருத்தி செய்வார்களா என்பது சந்தேகம். நவீன முறையில் அபிவிருத்தி செய்தால், உலக யாத்திரிகர்கள் இங்கு வரவும், இதனால் வருமானங்கள் அதிகரித்து, இப்பகுதி சுபிட்சமடையவும் கூடும். இவ் விஷயங்களில் அரசாங்கம் சீக்கிரத்தில் எதுவும் செய்யுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஆகவே, கடிதத்தில் அந்த அன்பர் கூறியுள்ளது போல், கீரிமலை கிராமக் கமிட்டியார், ஒரு அபவிருத்தி சபையை அமைத்து, பொது மக்களிடையே இதற்காகப் பணம் திரட்டி, கடலில் ஸ்நானம் செய்யவும் நல்ல முறையில் ஹோட்டல்களை அமைத்து, யாத்திரிகர்களுக்குக் கூடிய வசதிகளைச் செய்யவும் முன் வந்து ஒழுங்கு செய்வது, கீரிமலை மககளுக்கு மட்டுமின்றி, இலங்கைக்கே செய்யும் மேலான பணியாகும். இவ்வித நல்ல காரியத்துக்குப் பொது மக்களின் அமோகமான ஆதரவு கிடைக்குமென்றே கொள்ளலாம்.

## உலக மேடை

# கென்னடி-குரோமிகோ பேச்சு வார்த்தை

கென்னடி - குரோமிகோ பேச்சுவார்த்தைகள் பற்றி திருப்தியும், அதிருப்தியும் தெரிவிக்கப்படுகின்றன. ஆயினும் கிடைக்கும் செய்திகளிலிருந்து இப்பேச்சுவார்த்தைகள் வாஷிங்டனுக்கு ஏமாற்றத்தை அளித்திருப்பதையே காட்டுகின்றன. குரோமிகோவின் பேச்சு, ஜெர்மனி - பெர்லின் ஆகிய விஷயங்களில் சமீப எதிர்காலத்தில் உருப்படியான முறையில் கிழக்கு - மேற்கு பேச்சு வார்த்தைகள் நடக்க ஊக்கத்தை அளிக்கவில்லை எனக் கூறப்படுகிறது. எது எப்படியிருந்தாலும்,ஏற்கனவே அறிவிக்கப்பட்டது போல் கிழக்கு ஜெர்மனியுடன் தாங்கள் தனியாகச் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ளப் போவதை சோவியத் உதவிப் பிரதமர் திரு. மிக்கோயன் அழுத்தந்திருத்தமாக ஊர்ஜிதம் செய்திருக்கிறார்.

# ரஷ்யாவை அச்சுறுத்தும் ஜெர்மன்ராணுவம்

— டி. எம். எம். —

ஐக்கிய ஜெர்மனி ஏற்படுவதை ரஷ்யா இப்போது கொஞ்சமும் விரும்பவில்லை என்பதில் சந்தேகமில்லை. "ஐக்கியம்" என்ற பெயரைக் கேட்டாலே ரஷ்யாவுக்கு அச்சமும் நடுக்கமும் ஏற்படுகிறது. ஏற்கனவே மேற்கு ஜெர்மனி ஆயுத பாணியாக விளங்குகிறது. இப்போதும் கூட மேற்கு ஐரோப்பாவிலேயே மிகவும் வல்லமை வாய்ந்த பெரும் ராணுவமாக மேற்கு ஜெர்மன் ராணுவம் விளங்கி வருகிறது. போதாக் குறைக்கு ஜெர்மனி ஐக்கியமாகிவிட்டால் அந்த ராணுவ பூதத்தை லேசில் அடக்கிவிட முடியாதென்பதை மற்றெல்லோரையும் விட ரஷ்யா நன்கு அறியும். சென்ற யுத்தத்தில் ஹிட்லரின் "மின்வெட்டு"ப் படைகள் ரஷ்யாவைப்படுத்தியபாட்டை நினைத்தால் சோவியத்துக்கு அச்சம் ஏற்படுவது இயற்கையே. வெண்ணெயில் கத்தி பாய்வது போல் நாஜி ராணுவம் ரஷ்யாவில் வெகுதூரம் ஊடுருவியதுடன் லெனின், கிராட், மாஸ்கோ ஆகிய நகரங்களையும் கைப்பற்றி, சோவியத்தலைநகரத்தை மாஸ்கோவிலிருந்து விரட்டியது. இந்தப் போரில் லட்சோபலட்சம் ரஷ்யர்கள் உயிரிழந்தனர். 1500 மைல் நீளப் போர்முனையில் நடைபெற்ற ஸ்டாலின் கிராட் யுத்தத்தை எவருமே மறக்கமுடியாது. உலகம் உள்ளளவும் இந்தப்போரின் பயங்கரம் எல்லோருடைய நினைவிலும் இருக்கும்.

### போர்செய்யப் பிறந்தவர்கள்

உலகப் போரின் வெற்றி தோல்வி ஸ்டாலின் கிராட் போர்முனையில்தான் நிரூபிக்கப்பட்டது. ரஷ்யர்கள் தங்கள் உயிரைத் திரணமாக மதித்துப் போராடியதனால் மட்டும் ஹிட்லரை அடக்கிவிட முடியவில்லை. குளிர் காலம் வரும்வரை போரை நீடித்து, உயிரைப் பலிகொடுத்தனர் ரஷ்யர்கள். பின் ஏற்பட்ட குளிர்காலப் பனியினல் யுத்தப் போக்கு மாறியது. ஹிட்லரின் வீரர்களில் லட்சோபலட்சம் பேர் பனிக்குப் பலியானர்கள். யுத்தப் போக்கில் இயற்கை பெரிய அளவில் உதவிக்குவந்தது என்பதை ரஷ்யர்கள் நன்கறிந்திருக்கிறார்கள். எனவே, ஜெர்மன் ராணுவ பூதத்தின் அசுர பலம் எத்தகையதாய் இருக்கும் என்பதை அவர்கள் அனுபவத்தில் அறிந்திருக்கிறார்கள்.

ஜெர்மானியர் உலகிலேயே மிகச் சிறந்த போர் வீரர்கள். மேலும் "தந்தையர் நாடெனும் போதினிலே ஒரு சக்தி பிறக்குதென் மூச்சினிலே" என்னும் புருஷத்துவ உணர்ச்சியைக் கொண்ட வீரப்பரம்பரையினர். "தாய் நாடு" என்றால் அதில் மென்மையும், மிருதுத்தன்மையும் இருப்பதாகக் கருதி, வீரத்துக்கடையாளமாக "தந்தையர்நாடு" எனத்தங்கள் நாட்டைப் பெருமையுடன் அழைப்பவர்கள். சுருக்கமாகச் சொன்னல் போருக்காகவே பிறந்த போர்க்குணம்கொண்டவர்கள் என அழைக்கலாம். இரண்டு மகாயுத்தங்களுக்கும் காரணமாயிருந்தவர்களும் கூட சுதந்திர ஐக்கிய ஜெர்மனி ஏற்பட்டால், கூடவே அதன் ராணுவ பலமும் பெருத்துவிடும். ரஷ்யாவுக்கு. இதனல் அபாயம் ஏற்படும். எனவேதான் இந்த முயற்சிக்கு ரஷ்யா முட்டுக்கட்டையிட்டுவருகிறது.

மேலும், மேற்கு ஜெர்மனி வட அட்லாண்டிக் சாஸன ஒப்பந்தத்தில் சேர்ந்திருப்பதன் மூலம், அணு ஆயுதங்களைக் கொண்டும் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஐக்கிய ஜெர்மனி நீண்ட காலத்திற்கு ஏற்படாது எனலாம். இதே சமயம் உலகுக்கு நீண்ட, நிரந்தரக் கவலையளிக்கும் ஒரு பிரச்சினையாகவும் அது விளங்கலாம். அடுத்த நாலைந்துமாதங்களில் இப்பிரச்னையில் ஒரு திருப்பம் ஏற்படவும் இடமிருக்கிறது. யுத்தமும் சமாதானமும், ரஷ்யா-கிழக்கு ஜெர்மன் சமாதான ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஏற்படும் விளைவுகளைப் பொறுத்து அமையும்எனவும் கூறலாம்.

# ஐ.நா.காரியதரிசி பதவியில் கெடுபிடி

### ஆசனம் காலி!

வழக்கம்போல் ஐ. நா. காரியதரிசி பதவியை நிரப்பும்விஷயத்திலும் வல்லரசுகளிடையே கெடுபிடிப் போர் நடந்து வருவதை நினைக்க ஒரு புறம் சிரிப்பும், மறுபுறம் வருத்தமும் ஏற்படுகிறது. ரஷ்யாவின் மூன்று காரியதரிசிகள் யோசனை தற்காலிகமாகக் கைவிடப்பட்டு, அதிகாரமில்லாத மூன்று உதவியாளர்களை நியமிக்க வேண்டுமென்ற யோசனை கிளம்பியது. தலைமைக் காரியதரிசியும், அவரது 3 உதவியாளர்களும் பரஸ்பர இணக்கத்தின்மீது கடமையாற்ற வேண்டும் என்றும், பொதுச் சபையும் பாதுகாப்புச் சபையும் அவ்வாறு வேண்டுகோள் ஒன்றை விடுக்க வேண்டுமென்றும் ரஷ்யா கேட்டது. கடைசியாகக் கிடைத்துள்ள செய்திகளின்படி 1963ம் ஆண்டு வரைக்கான இடைக்காலத்திற்கு ஒருவரைத் தெரிவு செய்யும் விஷயத்தில் இருவல்லரசுகளுக்குமிடையே ஒரு உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. ஆனல் இன்னும் ஹமர்ஷீல்டின் ஆசனம் காலியாகவேகிடப்பதைப் பார்க்கிறோம். பொதுச் சபையின் கூட்டத்தைக் காட்டும் புகைப்படங்களிலெல்லாம் இந்த ஆசனம் காலியாகக் காட்சியளித்து மனதில் ஒரு பிரமையையும் துக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

இப் பதவிக்குப் பல பேருடைய பெயர்கள் அடிபட்டன. ஸ்ரீ நரசிம்மன், ஸ்ரீபோலாண்ட், ஸ்ரீ மொஸ்கி ஸ்லிம் ஆகியோரின் பெயர்கள் முன்பு அடிபட்டன. இப்போது பர்மாவைச் சேர்ந்த யூ தாண்ட் என்பவரின் பெயர் அடிபட்டுக் கொண்டிருக்கிறது. ஐ. நா. வுக்கு வெளியேயுள்ள தலைவர்களின் பெயர்களும் பலரால் உத்தியோகப் பற்றற்ற முறையில் சிபார்சு செய்யப்பட்டன. இந்தியப் பிரதமர் நேருவின் பெயரை முன்னாள் நியூஸிலந்து பிரதமரும், அமெரிக்க எதிர்க் கட்சித் தலைவரும் சிபார்சு செய்தார்கள். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி திரு. ஐஸன் ஹோவர், ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட், ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண் ஆகியோரின் பெயர்களும் கூட சிபார்சு செய்யப்பட்டன.

கடைசியில் யூ தாண்டின் பெயர் இப்போது அடிபடுகிறது. ஒரு வேளை இதுவும் கூட அடிபட்டுப் போகுமோ என்னவோ தெரியவில்லை. இந்நிலையில் ஐ. நா. மகாசபையை நியூயோர்க்கிலிருந்து ஜெனிவாவுக்கு அல்லது வீயன்னவுக்கு மாற்றவேண்டுமென ரஷ்யா கூறுகிறது. இந்தக் கெடுபிடி யுத்தப்போக்கு நகைப்பை உண்டாக்குகிறதல்லவா!

## ஆசிரியர்கள் நியமனம்

கல்விடைரக்டரின் நிர்வாகத்திலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களை நியமிக்கும் விஷயத்தில், பாடசாலை அதிபர்களின் உதவியையும் ஒத்துழைப்பையும்நாட, கல்வி அமைச்சர் தீர்மானித்திருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

ஆசிரியர்கள் தெரிவுசபையிலே, சம்பந்தப்பட்ட பாடசாலைத் தலைமை ஆசிரியரும் இடம்பெறுவரென்று தெரிகிறது. தலைமை ஆசிரியரிடமே பாடசாலைநிர்வாகப் பொறுப்பு ஒப்புவிக்கப்பட்டிருப்பதால், அவரது ஆலோசனையைக் கேட்டு ஆசிரியர்களை நியமித்தாலே பாடசாலை நிர்வாகம் சீராகவும் கட்டுப்பாடாகவும் நடைபெறமுடியும். தலைமை ஆசிரியர்கள் குட்டி சர்வாதிகாரிகள் போலாகி, ஊழல்களும் மலிய இதனல் இடமேற்படுமோ என்ற சந்தேகம் எழக்கூடும். ஆனல் ஒவ்வொரு பாடசாலைக்கும் தக்க க்ஷேமநலசபைகள் நியமிக்கப்படின், நிர்வாக ஊழல்களுக்கு அதிக இடமிராது.

### ஆசிரியருக்குக் கடிதம்

## கீரிமலை

கீரிமலை ஊற்று சிறப்பாக யாழ்ப்பாணமக்களுக்கும் பொதுவாக இலங்கை மக்களுக்கும் இறைவனல் வழங்கப்பட்ட ஒரு வரப்பிரசாதமாகும்.

குளிப்பதற்கு சௌகரியமானதும் நோய்களைத் தீர்ப்பதற்கு மிகவும் உகந்ததுமான கீரிமலைக் கேணி இருந்தும் அருகிலுள்ள கடலில் குளிப்பது மக்களுக்கு மிகுந்த சிரமமாகவே இருக்கிறது. கடற்கரை அருகேயுள்ள பாறைகள் தான் இதற்குக் காரணம்.

கரையிலிருந்து 200 யார் தூரத்துக்கு இவ்வித பாறைகள் அகற்றப்பட்டு அந்த எல்லையைக் குறிக்குமாறு முட்கம்பி இடப்பெற்றால் பொது மக்கள் தாராளமாக கடலில் குளிக்கலாம் என்ற கருத்து நிலவி வருகின்றது.

கீரிமலைப் பகுதியிலுள்ள கிராமசபை தலைவர் கீரிமலை அபிவிருத்திச் சங்கம் ஒன்றை ஆரம்பிக்க முயலவேண்டுமென நான் கருதுகிறேன்.

கரையிலிருக்கும் பாறைக்கற்களை அகற்றுவதற்கு வழி செய்வதற்கான நிதி உதவியை பொதுமக்களிடமிருந்து பெற இச் சங்கம் முயற்சிசெய்யலாம்.

(?ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

முந்தா நாள் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடைபெற்ற மிருதங்க அரங்கேற்றத்துக்கு, ஒரு கலைஞரான சந்தானம் தலைமை வகித்தது, மணியாக வதர் கூறியதுபோல், மிக விசேஷம்.

சாதாரணமாக இவ்வித விழாக்களுக்கு ஓர் அரசியல் வாதியையோ, அல்லது பெரிய பதவி வகிக்கும் ஒருவரையோ தான் தலைமை வகிக்கும்படி கேட்பது வழக்கம். அன்று மண்டபத்தில் எவ்வளவோ பெரிய மனிதர்களெல்லாம் இருந்தனர். அவர்களையெல்லாம் விட்டு, ஒரு சங்கீத வித்வானை தலைமை வகிக்கும்படி ஏற்பாடு செய்தவர்களைப் பாராட்ட வேண்டும். கலைஞர்களைக் கௌரவிப்பதன்மூலம் தான் நாம் கலைகளை வளர்க்க முடியும்.

* * *

ஓரிடத்தில் ஒரு பெரிய மனிதரை இவ்வித விழாவில் பேசும்படி கேட்டதும், அவர், இந்த 'டிரம்மர்' (மிருதங்கக்காரர்) நன்ருக 'பிளே' செய்தார் என்று சொன்னராம்!

ஆனல் எல்லாப் பெரிய மனிதரும் அப்படியல்ல. அன்று நீதி அரசர் டாக்டர் தம்பையா, விழாவுக்கு வந்திருந்து, செல்வனின் வாசிப்பை மிகவும் ரஸித்தார். மிருதங்கம் வாசிப்பதில் நீதி அரசர் கைதேர்ந்தவர். சிறு வயதில் சில கச்சேரிகளுக்கு அவர் மிருதங்கம் வாசித்திருக்கின்றாராம். இப்போதும் கூட வாசிக்க முடியுமாம். அவர் அன்று பேசாதது எனக்கு ஏமாற்றமாக இருந்தது.

* * *

நன்கு பாடக் கூடிய வித்வான் சந்தானம் அன்று மிகக் கச்சிதமாகப் பேசினர். "சமையலுக்கு உப்பு எப்படியோ, அப்படி சங்கீதத்துக்கு மிருதங்கம். கச்சேரியில் சாதாரணமாக மிருதங்கத்துக்கு மூன்ருவது ஸ்தானமே கொடுக்கிறோம். ஆனல் தியாகராஜஸ்வாமி, 'சொகுசுகா மிருதங்க தாள முஜதகூர்ச்சி" என்று அந்த வாத்தியத்துக்கு முதல் சிறப்பு அளித்துள்ளார். இந்தியாவிலுள்ளதைவிட, இலங்கையில் சங்கீதத்துக்கு நல்ல ஆதரவு இருக்கிறது. இங்கு ஜே. எஸ். ஸி, எஸ். எஸ். ஸி., எச். எஸ். ஸி. வகுப்புகளுக்கும் சங்கீதம் ஒரு பாடமாக்கப்பட்டிருப்பது விசேஷம். இந்தியாவில் அப்படி இல்லை. இங்கு சர்வகலாசாலை ஆரம்பித்து அதில் சங்கீதத்துக்கு மேலான இடம் அளிக்கப்போவது மிக மகிழ்ச்சி அளிப்பதாகும்" என்று கூறி, செல்வன் பிரகலாதனின் வாசிப்பைப் பாராட்டிவிட்டு, இன்னும் அதிகம் கற்று முன்னேறவேண்டுமென்ருர்.

* * *

இரண்டுவருடங்களுக்கு முன் வித்வான் சந்தானத்தின் கச்சேரியை திருவையாறு தியாகராஜ உற்சவத்தில் முதல் முதலாகக் கேட்டேன். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. தகப்பனரையும் விட முன்னுக்கு வந்துவிடுவார் என்று அப்போது எழுதியிருந்தேன். அவர் நம் இலங்கைக்கே வந்து, இங்கு இராமநாதன் கல்லூரியில் சேர்ந்து இசைப் பணி செய்து வருவதைக் காண மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

சென்ற பல வருடங்களிலே ஈழம் சங்கீதக் கலை விஷயமாக மிக மிக முன்னேறியுள்ளது. எதிர் காலத்தில் தாயையும் சேய் மிஞ்சிவிடுமென்பதற்குப் பல நல்ல அறிகுறிகளைக் காண்கின்றேன்.

* * *

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் புதிதாகச் செல்லும் நோயாளருக்கு எங்கு செல்லுவது என்பதுபற்றி யோசனை கூற யாருமில்லை என்றும், கொழும்பு, பண்ணை முதலிய ஆஸ்பத்திரிகளில் இதற்கு தனியாக ஓர்

(5-ம் பக்கம் பார்க்க)

# ‘கடற்படையினர் தான் கொண்டுவந்தனர்’

## சட்டவிரோத குடியேற்ற வழக்கில் நீதிபதி கருத்து

## எதிரிகள் விடுதலை

காங்கேசன்துறை, வியா.

“23 கள்ளக் குடியேற்றக்காரர்களையும் இலங்கை கடல் எல்லைக்குள் வைத்துத்தான் கைது செய்தார்கள் என்பதை பொலிசார் நிரூபிக்கத் தவறிவிட்டார்கள். இங்கு சமர்ப்பிக்கப்பட்ட அட்டையில் கள்ளக் குடியேற்றக் காரர்களை ஏற்றி வந்த கள்ளத்தோணியை எவ்விடத்தில் வைத்து கடற்படை வீரர்கள் கைது செய்துள்ளார்கள் என்பதை இலகுவாகச் சுட்டிக்காட்டியிருக்கலாம். ஆதலால் இக் கள்ளத்தோணியை இலங்கைக் கடல் எல்லைக்குள் வைத்துத்தான் இலங்கைக் கடற்படை வீரர்கள் கைது செய்தார்கள் எனபதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த 23 பேர்களையும் கடற்படை வீரர்கள் தான் இலங்கைக்குக் கொண்டுவந்தார்களே ஒழிய எதிரிகள் அல்ல.”

23 சட்டவிரோதக் குடியேற்றக்காரரை இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கொண்டு வந்ததாக வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நான்கு பேர்கள் மீது குற்றஞ்சாட்டி காங்கேசன்துறை உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஏ. எஸ். மரியநாயகம் பருத்தித்துறை நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட ஓர் வழக்கில் நான்கு எதிரிகளையும் விடுதலை செய்து தனது தீர்ப்பை கூறுகையில் நீதிபதி மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நாராயணசாமி இராசகோபால், கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை, ரங்கசாமி குருகுல இரத்தினம், வடிவேல் செல்வராசா ஆகிய நால்வர்மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

திரு. என். நடராசா எதிரிகள் தரப்பில் ஆஜரானர்.

### இலங்கையிடமிருந்து ஈரான் தேயிலைவாங்கும்

கொழும்பு, வியாழன்

இலங்கையிலிருந்து ஈரான் ரூ. 4 கோடி பெறுமதியான தேயிலையை இறக்குமதி செய்யும்.

சென்றவாரம் இலங்கை கூட்டுறவு மொத்தவிற்பனவு நல்லெண்ண தூதுகோஷ்டியிடம் ஈரான் இதுவிஷயத்தைத்தெரிவித்தது.

சமீபத்தில் இலங்கை திரும்பிய தூதுகோஷ்டி வர்த்தக உணவுக்கப்பல்போக்குவரத்து மந்திரி திரு. டி. பி. இரங்கரத்னவிடம் இது சம்பந்தமான அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது. வர்த்தக கப்பல் போக்குவரத்து அமைச்சு வர்த்தக ஒப்பந்தத்தை உறுதிப்படுத்த ஈரானுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துமெனத் தெரிகிறது.

வருடமொன்றுக்கு இலங்கையிடமிருந்து ஈரான் 1 கோடியே 10 லட்சம் ருத்தல் தேயிலை இறக்குமதி செய்கிறது.

### வாரண்ட் பிறப்பிக்க உத்தரவு

மாவிட்டபுரம், புதன்

மல்லாகம் நீதிமன்றத்தில் சுன்னகம் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட ஓர் வழக்குச் சம்பந்தமாகச் சுப்பிரமணியம், சுந்தரலிங்கம் என்பவர் தலைமறைவாகத் திரிவதால் அவரை உடனடியாகக் கைது செய்ய வாரண்ட் பிறப்பிக்கும்படி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் கட்டளையிட்டார்.

### இம்மாத முடிவுக்குள் போதிய கருவாடு

கொழும்பு, வியாழன்

இம்மாத முடிவுக்குள் இலங்கை தனக்குத் தேவையான கருவாட்டைப் பெற்றுக்கொள்ளுமெனக் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன டைரக்டர் திரு. டி. எல். டபிள்யு. ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிலிருந்து 12,000 அந்தர் கருவாடு வந்துகொண்டிருப்பதாகவும் பாகிஸ்தான், ஈரான் ஆகிய இருநாடுகளிலிருந்தும் மாதமொன்றுக்கு இலங்கை 70,000 அந்தர் கருவாடு இறக்குமதி செய்யுமெனவும் தெரிகிறது.

திரு. ராஜபக்ச இதுபற்றித் தெரிவித்ததாவது:-

பாகிஸ்தான் மாதமொன்றுக்கு 40,000 அந்தர் திறம்ரக கருவாடு இலங்கைக்கு அனுப்ப சம்மதித்துள்ளது. ஈரான் மாதமொன்றுக்கு 30,000 அந்தர் கருவாடு அனுப்பும்

# “நடக்கத்தெரியாது நடந்துவிட்டேன்; தப்பவழியில்லை”

## தற்கொலை செய்துகொண்டவர் இப்படி எழுதிவைத்தார்

நீர்வேலி, வியாழன்

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த ஐயம்பிள்ளை செல்லத்துரை (வயது 40) என்பவர் கிணற்றுள் வீழ்ந்து தற்கொலை செய்துகொண்டது சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினர்.

இறந்தவரின் ஆசைநாயகியான பேபி (வயது 18) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

கடந்த மூன்று வருடங்களாக இறந்தவர் என்னுடன் வாழ்ந்துவந்தார். சட்டமுறைப்படி இவர் அல்வாயைச் சேர்ந்த சின்னப்பிள்ளையை மணந்திருந்தார். தனது மனைவிக்குப்பராமரிப்பு பணமாக மாதா மாதம் ரூ 15/-செலுத்தி வருகிறர். பராமரிப்புப்பணமாக ரூ. 200/- கட்டவேண்டியிருந்தது. இப்பணம் இம்மாதம் 14-ந் திகதிக்கு முன்னதாகக் கட்டப்படவேண்டியிருந்தது. இதனல் அவர் அதிக கவலையடைந்திருந்தார். அவருக்கு வேறு கடன்களும் உண்டு. இரவு 8 மணியளவில் இருவரும் படுக்கைக்குச் சென்ருேம். நான் காலையில் படுக்கையை விட்டெழுந்தபோது அவர் படுக்கையில் இல்லை. அவர் காலைக்கடனை முடிப்பதற்குச் சென்றுவிட்டதாக எண்ணினேன். காலை 8 மணிவரை திரும்பிவராமையால் எங்கும் தேடிப்பார்த்தபோதும் கண்டுபிடிக்கமுடியவில்லை.

மறுநாள் காலை வீட்டிலிருந்து 100 யார் தூரத்தில் தோட்டத்திலிருக்கும் கிணற்றுள் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

பின்வரும் கடிதமொன்றையும் இறந்தவர் எழுதிவைத்துள்ளார்:

“சகலரும் அறியவேண்டியது. நான் நடக்கத்தெரியாது நடந்துவிட்டேன். எனக்கு ஒருவகையிலும் தப்பமுடியாது. துணிந்துவிட்டேன். வைத்திலிங்க அண்ணன் அறிவது நான் மீளுவேன் என்று பார்த்தேன் முடியாது. கலியாணவீட்டிற்குக் கொடுத்த காசையாவது வேண்டி எடுக்கவும்; இதையும் காட்டவும்” இங்ஙனம், இறப்பவன், ஐ. செல்லத்துரை.

டாக்டர் ஏ. அருமைநாயகம் பிரேதபரிசோதனை நடத்தினர்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

# ரூ. 2 கோடி செலவில் வீடமைப்புத்திட்டம்

கொழும்பு, வியாழன்

தேசிய வீடமைப்புத்திட்ட இலாகா வனத்தமுல்லையில் ரூ. 2 கோடிசெலவில் வீடமைப்புத் திட்டத்தை அடுத்தமாதம் ஆரம்பிக்கும் எனத்தெரிகிறது.

34 பகுதிகளைக் கொண்ட 4 மாடிகள் இந்தக்கட்டடத்தில் இடம்பெறும்.

இந்த கட்டடத்திலுள்ள ஒரு அறைக்கு ரூ. 20க்கும் ரூ. 30க்கு மிடையிலான தொகை அறவிடப்படும். 2 அறைகளுக்கு ரூ. 50 க்கும் ரூ. 60 க்கும் இடையிலான தொகை அறிவிடப்படும்

இந்த வீடுகள் குறைந்த வருமானமுள்ள தொழிலாளவர்க்கத்தினருக்கே கொடுக்கப்படும்.

1964-ம் ஆண்டு கட்டட வேலைகள் பூர்த்தியாகுமெனத் தெரிகிறது.

### தேசிய அபிவிருத்தி வரி நிதியாக்குமாறு மந்திரிகருத்து

கொழும்பு, வியாழன்

ரூ. 300 க்கும் ரூ. 500 க்கு மிடையில் மாதச்சம்பளம் பெறுபவர்களிடம் வசூலிக்கப்படும் 4சதவீத தேசிய அபிவிருத்தி வரியை தேசிய அபிவிருத்தி நிதியில் சேர்க்குமாறு தொழில் தேசியமய சேவை மந்திரி திரு. எம். பி. டி' சற்சிறிவர்த்தன கருத்து தெரிவித்துள்ளார்.

இந்த நிதியை அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்தலாம் என்றும் இவ்வித திட்டத்தால் அரசாங்கத்தின் அபிவிருத்தித்திட்டத்தில், தேசிய அபிவிருத்தி வரிசெலுத்துபவர்களையும் பங்குபற்றச்செய்யலாமென்றும் மந்திரி தெரிவித்துள்ளார்.

# ‘கங்காணியின்கவனக்குறைவே மரணத்துக்குக் காரணம்’

## மரணவிசாரணை அதிகாரி கண்டனம்

ஹொறணை, வியாழன்

ஆஸ்பத்திரி கங்காணியொருவர் தமது கடமையைச் சரிவரச் செய்யாததன் காரணமாக நோயாளர் ஒருவர் மரணமானர் எனத் தெரிய வருகிறது.

இந்த மரணம் பற்றி ஹொறணை மரணவிசாரணை அதிகாரி கூறியிருப்பதாவது:

“சாட்சியத்தின்படி குறிக்கப்பட்ட கங்காணி தமது கடமையைச் சரியாகச் செய்யவில்லை எனத் தெரிகிறது. மோசமான நிலைமையிலுள்ள நோயாளர் ஒருவர் தூக்குக் கட்டிலிலேயே எடுத்துச் செல்லப்படவேண்டியவர் குறிக்கப்பட்ட கங்காணி ஏன் அவ்வாறு செய்யத் தவறினர் என்பது பற்றி அவரை விளக்கம் கேட்குமாறு பகுதிவைத்திய அதிகாரியிடம் நான் கேட்கவிருக்கிறேன்”.

ஹொறணை ஹல்தோட்டிய வட்டாரத்தைச் சேர்ந்த மகவின் நோனு ஹொறணை ஆஸ்பத்திரியில் இறந்தார்.

மகவின் நோனு பிரசவத்துக்குச் சிறிது நேரத்துக்குப் பின்னர் மோசமான தேகநிலையில் இருந்தார் என விசாரணையின்போது தெரியவந்தது. அவரை எக்ஸ்றே பிடிக்கும்படி டாக்டர் ஒருவர் அறிவித்திருந்தார். ‘வார்ட்’ டிலிருந்து எக்ஸ்றே நிலையத்துக்கு ஒரு கங்காணியின் துணையுடன் இவர் நடத்திச் செல்லப்பட்டார். எக்ஸ்றே எடுத்த பின்னர் மகவின்நோனு ‘வார்ட்’ வழியில் பிரக்ஞையற்று விழுந்துவிட்டார். வேருெரு கங்கங்காணி நோயாளியை பிரசவ வார்டுக்கு எடுத்துச் சென்ருர். அங்கு சென்ற சில நிமிஷங்களில் நோயாளர் இறந்து போனர்.

ஹொறணை மரணவிசாரணை அதிகாரி மரணம் சம்பவித்தது எனத் தீர்ப்பளித்தார்.

### கரோலினு தோட்டக் கமிட்டித் தேர்தல்

நாவலப்பிட்டி, புதன்

நாவலப்பிட்டி மாவட்டத்தைச்சேர்ந்த கரோலினுதோட்டத்தைச் சேர்ந்த ல. தோ. தொ. யூ. பொதுக்காரியதரிசி திரு. எஸ். செல்லையா தலைமையில் நடந்த தேர்தல் கூட்டத்தில் பின்வருவோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: திரு. எம்.வீரப்பன், உபதலைவர்: திரு. பி. சியதோரிஸ், காரியதரிசி: திரு. கே. தேவராசு, பொக்கிஷதார்: திரு. எம். காமாட்சி, நிர்வாகக்கமிட்டி: திருவாளர்கள் பி. பெரியசாமி, எஸ். சடயன், எம். பழனியாண்டி, பி. பெருமாள். எம். அம்மாசி, எம். உலகநாதன், எம். ராசன், எஸ். வேம்படி, ஆர். தொப்பலான், டி. முத்துச்சாமி, வி. பழனியாண்டி, வி.முத்துச்சாமி, ஆர். செல்லமுத்து.

# “அகண்ட அரபுசம்மேளனம் அமைக்க வாரீர்!”

## அரபு நாடுகளுக்கு சிரியா பிரதமர் அழைப்பு

டமாஸ்கஸ், அக். 11

அகண்ட அரபு சம்மேளனம் அமைக்கவருமாறு சிரியா அரபு குடியரசு பிரதமமந்திரி டாக்டர் குஸ்பாரி நேற்று அரபு நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

அரபு சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் தங்கள் தனிப்பட்ட அந்தஸ்தைப்பேண முடியுமென்றும் டாக்டர் குஸ்பாரி தெரிவித்துள்ளார்.

அரபு சம்மேளனத்தில் உள்ள அங்கத்துவ நாடுகளைக் கொண்ட உயாதர சட்டசபை அமைக்கப்பட வேண்டுமென்றும் இச்சபையில் அங்கத்துவ நாடுகளுக்கு சரிசம அங்கத்துவம் அளிக்கப்படவேண்டுமென்றும் இச்சபை பொருளாதாரம், இராணுவம், அங்கத்துவ நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்கள், அங்கத்துவநாடுகளின் பாதுகாப்புபற்றி தீர்மானித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் சிரியாப் பிரதமர் கூறினர்.

அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றும் அவைகளுக்கென சொந்த ராணுவம் வைத்துக் கொள்வதுடன் உள்நாட்டு, வெளிநாட்டு ஆக்கிரமிப்பிலிருந்து அங்கத்துவ நாடுகளைப் பாதுகாப்பதற்கு கூட்டு தளபதிகளின் கீழ் கூட்டுஇராணுவம் ஒன்று உருவாக்கப்படவேண்டுமென்றும் டாக்டர் குஸ்பாரி அறிவித்தார்.

அங்கத்துவ நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு இருக்கக்கூடாதென்றும் அவர் கூறினர்.

சமாதான சகவாழ்வு, எந்த வல்லரசுக் கோஷ்டியுடனும் சேராத நடுநிலைமைகொள்கை ஆகியவைகளே அரபு சம்மேளனத்தின் கொள்கையாக இருக்குமென்றும் டாக்டர் குஸ்பாரி கூறினர்.

அரபு சம்மேளனத்துக்கென உயர்தர சட்ட நீதிமன்றம் ஒன்றும் அமைக்கப்படவேண்டுமென்றும் சிரியாப் பிரதமர் தெரிவித்தார்.

### ஆசிரியருக்குக்கடிதம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கீரிமலை மிகவும் பிரபல்யம்வாய்ந்த இடம் என்பது சகலரும் அறிந்த தொன்றே. எனவே, இந்த இயக்கத்துக்கு எல்லோரும் நிதி உதவி தந்து உதவுவார்கள் என்பது எனது திடமான நம்பிக்கை.

எஸ். வைத்தியலிங்கம், ஜே. பி.

கீரிமலை

### ரூ. 200 அபராதம்

பருத்தித்துறை, புதன்

சாராயம் வடிக்கும் உபகரணங்களையும் 3 கலன் 4 திரும் வடி சாராயத்தையும் வைத்திருந்தார் எனக் குற்றம் சாட்டி இளையதம்பி கனகரத்தினம் என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரிக்கு ரூபாய் 200 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினர்.

### ஐயாறன்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

அதிகாரி இருப்பதாகவும் ஓரன்பர் தெரிவித்து, அவ்வித ஏற்பாட்டை யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலும் செய்யவேண்டுமென்ருர். நல்ல யோசனை. போர்டுகள் போட்டிலிருந்தாலும், எனக்கே அன்று கைகாட்டச் சென்றபோது தட்டுக்கெட்டுப் போய்ற்று. நோயாளருக்கு வழிகாட்டும் ஒரு அதிகாரியை நியமிப்பது பல விதங்களிலும் நல்லதாகும்.

* * *

வருகிற பெப்ரவரி மாதம் 8 கிரகங்கள் ஒன்று சேருவதால் உலகத்தில் பல கேடுகள் ஏற்படலாமென்றும், அவ்விதம் ஏற்படாமல் பாதுகாக்க செய்வ அருளைப் பெறுவதற்கு, மதுல் கல்லையில் கோடி யாகம் நடப்பதாயும், அதற்கு இஸ்லாமிய, கிறிஸ்தவ, பௌத்த அன்பர்களும் கூட ஆதரவளித்து வருவதாயும், ஓர் அன்பர் தெரிவித்தார்.

இதே நோக்கத்துடன் முன்னீச்வரத்தில் கோடி அர்ச்சனை, வருகிற 23-ந் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. முதல் நாள் உபயத்தை பிரதமர் சிறிமா செய்ய ஒப்புக்கொண்டிருப்பதாயும், அன்று முன்னீச்வரம் கோவிலுக்கு வந்து தரிசனம் செய்து அவர் வழிபடுவாரென்றும் ஓர் அன்பர் தெரிவிக்கிருர்.

ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னநாத சுவாமி, பிரதமருக்கு நல்லறிவு தந்து நாடு அமைதியாக முன்னேற அருள் பாலிக்கவேண்டும்!



# மங்கையர் உலகம்



# குழந்தைகளின் பாலுணவு

## தாய்மார் அறியவேண்டிய ஆராய்ச்சி

இன்றைய குழந்தைகளுக்கு அவர்களின் மிகச் சிறு பிராயத்தில் ஊட்டப்படும் உணவு வகைகள் விஞ்ஞான ஆராய்ச்சி விளைவாகவே கண்டுபிடிக்கப்பட்டன. பிறக்கும் சிசுக்களுக்கு இயற்கையாகவே உகந்த மிகச் சிறந்த உணவு தாய்ப்பாலேயாகும். தாய்ப்பாலுக்குப் பதில் தகரப் புட்டிகளில் அடைக்கப்பட்டு வரும் மாவு, பால்வகைகளை ஊட்டிவரும் தாய்மாருக்கு அந்த மாவு வகைகள் எவ்வாறு தாயாரிக்கப்படுகின்றன என்று அறிய ஆவலாக இருக்குமல்லவா?

தாய்ப்பாலில் கொழுப்புச் சத்துக் குறைவாக இருப்பதால் குழந்தைகளின் நுண்ணிய சீரணக் கருவிகளால் அதை இலகுவாகச் சீரணிக்கக்கூடியதாகிறது. குழந்தைகளின் உடலுக்கு இலகுவாகவும் விரைவாகவும் உறுதியளிப்பதோடு அதிக ஆரோக்கியத்துக்கும் தாய்ப்பாலே சிறந்தது. ஆனல் தமது குழந்தைகளுக்குப் போதிய பால் பல தாய்மார்களிடம் இருப்பதில்லை. அத்தோடு குடிசைக் கைத்தொழில்களிலும் வேறு தொழில்களிலும் ஈடுபடும் தாய்மார் தமது குழந்தைகளைத் தாய்ப்பாலில் மட்டும் வளர்க்க முடிவதில்லை. எனவே தான், இன்றைய தாய்மாருக்கும் குழந்தைகளுக்கும் விஞ்ஞான ஆராய்ச்சித் தயாரிப்பான தகரப் பால்வகைகள் விமோசனமளிக்கின்றன. மாவுப் பால் தயாரிப்பு பற்றிய நியவிரும்பும் தாய்மார்களுக்கு இன்னுமொரு வியப்பூட்டும் செய்தியும் கூறுவதற்குண்டு.

தாய்ப்பாலில் உள்ள ஊன் வளர்க்கும் சத்து (Protein) குழந்தையின் வயிற்றில் உள்ள நீர்க்கோளங்களுடன் கலக்கும் போது மெல்லிய பதார்த்தமாக மாறி வெகு இலகுவாகச் சீரணிக்கிறதாம். இதுவிதமாக தாய்ப்பாலைவிட வேறு ஒரு பால்மட்டும் தான் குழந்தையின் வயிற்றில் சீரணிக்குமாம். ஆச்சரியப்படாதீர்கள். அந்தத் தன்மை தாய்ப்பாலைவிடக் கழுதைப்பாலிடமே இருக்கின்றது. தாய்ப்பாலில் உணவுச் சத்துகள் அடங்கியிருக்கும் விகித முறையில் கழுதைப் பாலில்தான் அடங்கியிருக்கின்றதாம். ஆனல், அதற்காகத் தாய்மார் தமது குழந்தைகளுக்குக் கழுதைப் பால் ஊட்டி வளர்ப்பார்களா?

புதிதாகப் பிறந்த குழந்தையொன்று வெகு விரைவாக வளர்கிறது. பிறந்த ஐந்துமாத காலங்களில் பிறந்தகாலத்திலிருந்த எடையிலும் இரண்டு பங்கு அதிகமாக வளர்ந்து விடுகிறது. ஒரு ஆண்டின் முடிவில் அதனிலும் மூன்று மடங்கு நிறை கூடுகிறது. ஒருசிலரை விட, ஆரோக்கிய முள்ள தாய்மாரிடம் பிள்ளைக்குத் தேவையான தாய்ப்பால் காணப்படுவதில்லை. குழந்தையின் ஒவ்வொரு எடை உடல் நிறைக்கும் தினமும் 2. 5 அவுன்ஸ் தாய்ப்பால் தேவைப்படுகிறது. பிள்ளைகளுக்குப் பால் உணவு அதிகம் தேவைப்படுவதாலேயே பசுப் பாலும் மற்றைய பால் வகைகளும் பிள்ளைகளின் உணவுத் தேவைகளாகின்றன.

பசுப்பால், ஆட்டுப்பால் ஆகியவற்றில் கொழுப்புச் சத்து அதிகம். 'கேசின்' (Casein) என்னும் ஊன் வளர்க்கும் சத்து உள்ளவை குழந்தைகளின் வயிற்றில் இவை இலகுவில் சீரணிக்கமாட்டா. எனவே ஆடு, மாடு, எருமைகளிலிருந்து பெறப்படும் மிகச் சிறந்த பாலும், பிள்ளைகளின் உடலுறுப்புக்கேற்ற விசேஷ மாற்றங்கள் எவையும் செய்யப்படாதவரை குழந்தைகளுக்கு அளிக்கக்கூடாது.

எருமை, மாடு ஆகியவற்றில் பால் அருந்தும் பிள்ளைகள் மிருகத்தின் தன்மைகளைப் பெற்றுவிடும் எனச் சிலர் கருதுவதற்கு விஞ்ஞான ஆதாரம் எதுவுமில்லை. அதிகம் கொழுப்புச் சத்து நிறைந்த எருமைப்பால் இந்தியாவின் சில பாகங்களில் விரும்பப்படுகிறது.

'குழந்தைகளின் உணவு' என்னும்போது யந்திர சாதனத்தினல் உலர்த்தி மாவாக்கப்பட்ட பால்மட்டுமாகாது. ஒருகாலத்தில் இவ்வாறு பால்மட்டுமே உலர்த்தி மாவாக்கப்பட்டது. பின்னர் அரைத்த தானிய மாவும் பால் மாவும் சேர்த்துக் குழந்தைகள் பாலுணவுகள் தயாரிக்கப்பட்டன. ஆனல் இன்றைய முறைகளின்படி தானிய மாவு, பால் மாவு ஆகியவற்றுடன் 'வைட்டமின்' என்று சொல்லப்படும் உயிர்ச் சத்துக்களும் சேர்க்கப்படுகிறது.

'குழந்தைகள் உணவு' என்னும் பெயரில் பெருந்தொகையான உணவு வகைகள் தயாரிக்கப்பட்டுவருகின்றன. இந்த உணவு உற்பத்தித்தொழில்கள் உலகின் பல பாகங்களினும் நடந்து வருகின்றன. உள்ளூரில் கிடைக்கும் பசுப் பால் சுத்தமாகக் கிடைக்காத காரணத்தால் இந்தக் குழந்தை உணவுகளைப் பலர் விரும்புகின்றனர். தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் உணவு வகைகள் மிகச் சிறந்த சுகாதார நிலைமைகளிலேயே தயாரிக்கப்படுகின்றன. அத்தோடு உடன் பசுப்பாலிலும் சிறந்தவையாக இவை தயாரிக்கப்படுகின்றன. பிள்ளைகளுக்கு இலகுவில் சீரணிக்கக் கூடிய வகையில் தயாரிக்கப்படுவதுடன் வைட்டமின் உணவுச் சத்துக்கள் பிள்ளைகளுக்குத் தேவைப்படும் வகையில் சேர்க்கப்படுகின்றன. எவ்வளவுக்குத் திறமையாகச் செய்யக் கூடும் என்றும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டே இவை தயாரிக்கப்படுகின்றன.

---

## மணமக்கள் சந்திக்க நூதனவழி

மணப்பெண்ணை நேரில் பார்க்க சௌகரியமில்லாவிட்டால் அவளுடைய புகைப் படத்தையாவது பெற்றோர் களும் கல்யாணம் செய்து கொள்ளப்போகிறவரும் பார்ப்பது சகஜம். புகைப்படத்தை மட்டும் பார்த்தால் குற்றங் குறைகள் தெளிவாகத் தெரியாமலிருக்கலாம்.

இதற்காகத் தான் நம் புராதன வழக்கப் பிரகாரம் மணமகனும் குடும்பத்தினரும் மணமகளின் வீட்டுக்குச் சென்று மணமகளையும் அவள் குடும்பத்தினரையும் சந்திப்பது வழக்கம்.

மணமகளை நமஸ்கரிக்கச் சொல்வது, பாடச் சொல்வது இதெல்லாம் மணமகளுக்கு ஏதாவது குற்றங்குறைகள் இருக்குமானல் அவற்றைத் தெளிவாக்குவதற்காகத் தான்.

புகைப்படத்தைப் பார்ப்பது இப்பொழுது பழைய முறையாகிவிட்டது.

மேல்நாடுகளில் மணமகனும் மணமகளும் ஒருவரைப்பற்றி மற்றொருவர் நன்கு தெரிந்து கொள்வதற்கு ஒரு நூதன முறை தோன்றியுள்ளது. இதை ஜெர்மனியர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார். இது என்னவெனில் ஒரு பெண்ணின் புகைப்படத்தை யெடுப்பதற்குப் பதிலாக அவளுடைய சலனப்படத்தை யெடுப்பது தான். ஒரு நிமிடமோ இரண்டு நிமிடங்களோ கமரா முன்பு வந்து பெண் நிற்பாள், பேசுவாள், நடப்பாள். அவ்வளவு தான் சலனப்படம் தயாராகிவிடும்.

இந்த நூதன முறையைக் கையாண்ட ஜெர்மனியரிடம் விவாகத்தை விரும்பும் எத்தனையோ ஆண்களுடைய சலனப்படங்களும் பெண்களுடைய சலனப்படங்களும் இருக்கின்றன. தனக்குத் தகுதியான ஒரு பெண்ணை விவாகம் செய்யக் கோரிக்கொண்டிருப்பவருக்கு தன்வசமிருக்கும் கல்யாணத்தை விரும்பும் பெண்களின் சலனப்படங்களை யெல்லாம் காண்பிப்பார். அவற்றில் எந்தப் பெண்ணை இந்த நபர் விரும்புகிருரோ அந்தப் பெண்ணுக்கு இந்த அபேட்சகரின் சலனப்படத்தையும் காண்பிக்க ஏற்பாடு செய்வார். அந்தப்பெண்ணுக்கும்இவரைப் பிடித்துவிட்டால் அவர்களிருவரும் சந்திப்பதற்கான ஏற்பாடுகளையும் இவர் செய்வார். பிறகுஎன்ன? திருமணம் தான்.

---

## அக்ஷராரம்ப ஏடு (ஓலைச்சுவடி)

கிடைக்குமிடம்:- சோதிட விலாச புத்தகசாலை 46 பெரிய கடை, யாழ்ப்பாணம்.

விலை:- சதம் 10.

விஜயதசமியை முன்னிட்டு சிறு குழந்தைகளுக்கு அக்ஷராரம்பம் செய்வதற்குரிய இந்த ஏடு பனை ஓலையில் அழகாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. ஓலைச் சுவடியில் அச்சிடப்பட்டுள்ள இந்த ஏடு பழந் தமிழகத்தை நினைவு கூரவைக்கும் புதிய முயற்சியாகும். குழந்தைகளுக்கு கவர்ச்சியை ஊட்டக் கூடியது.

---

# 'வீரம், கல்வி, செல்வம் இவற்றுக்கு பெண்களே தெய்வம்'

## நவராத்திரி விழாவில் விளக்கம்

தெல்லிப்பழை, வியாழன்

"வீரம், செல்வம், கல்வி என்பனவற்றிற்குப் பெண்களையே தெய்வமாகக்கொண்ட பெருமை சைவசமயத்துக்கே சிறப்பாக உள்ளது. நவராத்திரி விழாவைத் தொழில் மேன்மை குறிக்கும் வாரமாக எம்முன்னேர் கொண்டாடி மகிழ்ந்தனர்."

தெல்லிப்பழை மேற்குப் பொற்கலந்தம்பை மெய்ஞ் ஞானவயிரவ சுவாமி கோயிலில் நேற்றிரவு நவராத்திரிப் பெருமை பற்றி உரைநிகழ்த்தியபோது வேதாகமபூஷணம் பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் மேற்கண்டவாறு கூறினர். அவர் தொடர்ந்து கூறியதாவது:–

"ஈழநாட்டில் நவராத்திரி, திருவெம்பாவை இரண்டும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. ஆலயங்களில் திருவெம்பாவை கொண்டாடப்படுகின்றது. நவராத்திரியோ இவற்றுடன் நின்றுவிடாமல் இல்லங்கள்தோறும் கொண்டாடப்படுகின்றது. நவராத்திரி விழாவின் அவசியத்தைச் சாஸ்திரங்கள் பின்வருமாறு மொழிகின்றன: வசந்தருது, சரத்ருது என்பன இரண்டும் மனிதருக்கு மனப்பிணி, உடற்பிணி என்பனவற்றை விளைவித்து நோய் செய்கின்றன. இதனல் யமனுடைய இரண்டு கோரப்பற்களுக்குச் சமானமாக இந்த இரு ருதுக்களும் கூறப்பட்டுள்ளன. இவற்ருலுண்டாகும் துன்பங்களில் நின்று நீங்கவேண்டில் மனிதன் நவராத்திரிவிழாவைக் கொண்டாடவேண்டும். இவ்விழாவின் முக்கிய அம்சம் கன்னிபூஜையாகும். இரண்டு வயதுமுதல் பத்து வயதுவரை உள்ளிட்ட கன்னிப்பெண்களை வேதமந்திரங்களினல் பூஜித்தல்வேண்டும்."

திரு. செ. கதிரேசம்பிள்ளை 'சமயமும் இலக்கியமும்' என்பதுபற்றிப் பேசுகையில், அரிச்சந்திரன், இராமன், நளன் என்ற சரித்திரபுருஷர்களின் வரலாறுகள் உண்மை என்ற பேரானந்தத்தை மக்களுக்கு விளக்குவதாகக் குறிப்பிட்டார்.

---

## அரசாங்கம் பொறுப்பேற்றது

யாழ்ப்பாணம், வியாழன்

சிறுபான்மைத் தமிழரின் அல்லாரை வெள்ளம் போக்கட்டிபுதியபாடசாலையை திங்கட் கிழமை அரசாங்கம் பொறுப் பேற்றுள்ளது.

சுமார் 200 மாணவர்களும் 8 ஆசிரியர்களும் இங்கு உளர்.

---

## பெண்கள் உடல் நலம் குன்றுவது ஏன்?

இளம் பெண்களின் உடல் நலம் குன்றி வருவதைக் கவனித்த ஈழத்துப் பெண்மணி ஒருவர் தமிழ் நாட்டிலும் இது மிகுந்த கவலையை உண்டாக்கி வருகின்றதென்பதைக் குறிப்பிட்டு பின்வரும் குறிப்பையும் அனுப்பியுள்ளார். இது தமிழ் நாட்டுப் பத்திரிகை ஒன்றில் வெளி வந்திருப்பதாக அவர் தெரிவிக்கின்ருர்.

"இந்த இளம் பெண்கள் இவ்வளவு உடல் நலம் குன்றுவது ஏன்? படிப்பினலேயே குன்றுகிறதா? சமுதாயத்தினலேயா? அல்லது இந்தப் பவுடர் முதலிய மேலை நாட்டுப் பூச்சுக்கள் காரணமா? சோப்பு நாகரிகமா? உடல் உழைப்பின்மையா? படிக்கின்ற ஆண்பிள்ளைகளைப்போல் வெளியில் சென்று உலவி நல்ல காற்றில் தோய்ந்து கதிரவன் ஒளிக் கதிர்களில் மூழ்காததினலா? சாணியைத் தொட்டுப் பிசைந்து, கரைத்துக் காலையில் போடாமல் இருக்கிற காரணமோ? படுக்கை விட்டெழுந்தவுடன் பல் துலக்காமல் கூட காப்பி குடிக்கின்ற காரணமோ? உணவு மாற்றமோ? படிப்புத்தான் உடம்பை உருக்குகிறதா? இதை ஆராய்ந்து உண்மையைக் கண்டு பிடித்து அந்த வடிகாலை அடைக்காவிட்டால் இன்னும் இருபது ஆண்டுகளுக்குள் வீரர்களைப் பெற்றெடுக்கின்ற தாய்மார்களே மறக்குடி மங்கையரே இல்லாது அழிந்து போய்விடுவார்களென்று நான் அஞ்சுகிறேன். அவ்வளவு பெரிய ஆபத்து இன்று தமிழகத்தில் சூழ்ந்திருக்கின்றது."

---

## ஊர்காவற்றுறைக் கோஷ்டி வெற்றி

ஊர்காவற்றுறை, வியாழன்

ஊர்காவற்றுறை உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், காரைநகர் 'இந்து' விளையாட்டுக் கழகக் கோஷ்டிக்குமிடையே, சென்ற சனிக்கிழமை நடந்த சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் ஊர்காவற்றுறைக் கோஷ்டியினர் வெற்றி பெற்றனர். காரைநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. இரத்தினகிலி நடுநிலைமையாளராகக் கடமையாற்றினர்.


தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்
33
303 ஊதுபத்திகளை
3003
உபயோகியுங்கள்.
யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.
தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்–2.
சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ.
குருதெனிய.

## நாவலர் வித்தியாசாலையில் சமஸ்கிருத பரீட்சை

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நாவலர் வித்தியாசாலை மண்டபத்தில் நடந்த ஆரம்ப சமஸ்கிருதப் பரீட்சைகளில் சுமார் 60 பரீட்சார்த்திகள் கலந்துகொண்டு விடை எழுதினர்கள். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, வண்ணை நாவலர் வித்தியாசாலை என்பவற்றிலும் வேறு கல்வி கழகங்களிலும் கற்பவர்களும் வெளிப் பரீட்சார்த்திகளுமான இவர்களுள் பி. ஏ. வகுப்பு மாணவர்களோடு ஆறும், ஏழாம் வகுப்பு மாணவர்களும் காணப்பட்டார்கள். இலங்கையில் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் இப்பரீட்சைகள் நடப்பதால் கொழும்பிலிருந்தும் ஐந்து பரீட்சார்திகள் வந்து பரீட்சையெழுதிவிட்டுத் திரும்பியமை குறிப்பிடத்தக்கது.

சமஸ்கிருத விஸ்வ பரிஷத் என்னும் அகில உலக வடமொழிக் கழகத்தின் வட இலங்கைக் கிளையாகிய புத்தூர்க் கேந்திரத்தினுல் சென்ற நான்கு ஆண்டுகளாய் இங்கு நடாத்தப்படும் இப் பரீட்சைகள், பம்பாய் பாரதீய வித்யா பவனம் என்னும் பிரசித்தி பெற்ற பல்கலைக் கல்லூரியால் நிர்வகிக்கப்படுவனவாகும்.

இப்போது நடந்த இப் பரீட்சைகளின் பெறுபேறுகள் டிசம்பர்மாத முதல் வாரத்தில் வெளியாகுமென்றும், மீண்டும் பெப்ரவரியில் இங்கு இப் பரீட்சைகள் நடக்குமென்றும் தெரிகிறது. குறித்த புத்தூர்க் கேந்திரம், இப்பரீட்சைகளைவிட காஞ்சிகாமகோடி பீடாதிபதிகளால் ஸ்தாபிக்கப்பட்ட சென்னை அமரபாரதி பரீட்சா சமிதியின் இந்து தர்ம சமஸ்கிருத பரீட்சைகளையும் இங்கு நடாத்த முன்வந்திருக்கின்றது. இப்பரீட்சைகளிலுள்ள சிறப்பான ஒரு அம்சம், பாடப் புத்தகங்கள் பரீட்சார்த்திகளுக்கு இலவசமாகக் கொடுக்கப்படுவதாகும்.

## கியூவில் நின்றபெண் மயங்கி விழுந்தார்

கொழும்பு, புதன்

காலிக்குச் செல்வதற்காக புறக்கோட்டை பஸ்நிலையத்தில் பஸ்ஸுக்காக நீண்டநேரம் கியூவில் காத்து நின்ற ஒரு பெண் மயங்கி விழுந்தார். அந்தப் பெண் ஒன்றரை மணிநேரம் கியூவில் நின்ருர். இச்சம்பவம் நேற்றிரவு நடைபெற்றது.

## வெடிகுண்டு விபத்து

மாத்தறை, புதன்

பிராட்வே வீதியில் ஒரு காருக்கு எறியப்பட்ட வெடிகுண்டு இலக்குத் தவறியதால் அந்த வழியில் சென்றுகொண்டிருந்த வில்சன் என்னும் சிறுவனின் காலைக் காயப்படுத்தியது. சிறுவன் உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான்.

வெடிகுண்டு வெடித்த சிறிது நேரத்தில் மருதானையைச் சேர்ந்த கமால்தீன்சாலி முகமது அசீஸ் என்பவரைப் பொலிசார் கைதுசெய்தனர்.

மாத்தளை மாஜிஸ்திறேட் திரு. எம். செனிவரத்தின முன்னிலையில் அசீஸ் ஆஜர் செய்யப்பட்டார். மாஜிஸ்திரேட் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**வெள்ளி 13-10-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமி நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 7-45 ஸ்ரீ. மாணிக்கவாசகர்—பக்திப்பாடல்கள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல 12-00 சித்திரகானம். 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பக்திப்பாடல்கள் ஒலிப்பதிவு, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 புல்லாங்குழலும், கோட்டுவாத்தியமும். இரவு 7-00 ஞானு—அஞ்சலி, 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 எஸ். பி. எம். திருநாவுக்கரசு-நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 ராஜாமடம் ஆர். எஸ். பாலசுப்பிரமணியம்—நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர் களுழகு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 வயலின், 1-50 குரல் இசை, 2-10 சி. பி. வேதவியாசராவ்—பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 காந்திகதை, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 மஹாராசஜபுரம் விஸ்வநாதய்யர்—பாட்டு. 9-15 பலகணி, 9-30 மெல்லிசைப் பாடல்கள், 9-45 இசைமாலை.


நான் விரும்புவது

நெஸ்டோமோல்ட்

அது எனக்கு எவ்வளவோ நன்மையளிக்கின்றது...




குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும்இந்த நெடோமோல்ட் அபார நன்மை அளிக்கவல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம். இது மோல்ட்டட் பார்லி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம், ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள்மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

நெஸில்ஸ்

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில் புரோடக்ட்ஸ் (சிலோன்) லிமிட்டெட்
த. பெ. 189,
கொழும்பு.

நெஸ்டோமோல்ட்

விட்டமின் B அடங்கியது.


## தலதாபனங்களுக்கும் அப்பீல் சபை

### சட்டவிதிகள் பார்லிமெண்டில் வரும்

கொழும்பு, புதன்

ஸ்தலஸ்தாபன சபைகளில் கடமையாற்றுவோர்களின் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் பற்றியும் தண்டனைகள் தீர்ப்புகள் பற்றியும் விசாரணை செய்வதற்கென அப்பீல் சபைகளை நிறுவுவதென ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் தீர்மானித்துள்ளது.

அப்பீல் சபைகளில் ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனின் இரு அங்கத்தவர்களும் அங்கம் வகிப்பர். ஆனல் இந்த இருவரும் முன்பு விசாரணைக் கமிட்டியில் அங்கத்துவம் வகிக்காதவர்களாக இருப்பர். ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனின் தலைவரும் அப்பீல் சபைகளில் அங்கத்துவம்வகிப்பார்.

அப்பீல்களுக்கான சட்ட நியதிகள் சிலவற்றை ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் தயார் செய்துள்ளது. இந்தச் சட்ட நியதிகள் பார்லிமெண்டின் அங்கீகாரம் பெறுவதற்கெனப் பாலிமெண்டுக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

புதிய நியதிகளின்படி அப்பீல் சபையின் தீர்மானத்துக்கு எதுவித மாற்றங்களும் செய்யமுடியாது. அப்பீல் சபையின் தீர்மானங்களே இறுதியான தீர்மானங்களாகும்.

ஸ்தலஸ்தாபன சபைக் கமிஷனல் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிட்டிகளின் தீர்ப்புக்களை பார்வையிடுவதற்கு அப்பீல் சபைகள் தேவைப்படுகின்றன என்று அரசாங்க அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

1955-ம் ஆண்டில் ஒழுங்கு நடவடிக்கை விதிக்கப்பட்ட ஊழியர்கள் தம்மீது விதிக்கப்பட்டுள்ள தீர்ப்புகளை மீண்டும் ஒருதடவை ஆராய்ந்து பார்க்குமாறு ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனிடம் கோரியுள்ளார்களாம்.

# “சுதந்திரக்கட்சியும் யு.என்.பி.யும் நாணயத்தின் இரு பக்கங்கள்”

## உடுப்பிட்டி எம். பி. வர்ணனை

## பொருளாதாரத்தைப் பெருக்க யோசனை

உடுப்பிட்டி, வெள்ளி

“இன்று ஆளுங் கட்சியாக விளங்கும் சுதந்திரக் கட்சியும் யு. என். பி. யும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். அவற்றிடையே பெரும் வேற்றுமைகளைக் காணமுடியாது. அவசரகாலச் சட்டம் ஏன் எடுக்கப்படவில்லை யென்று நான் நிதிமந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவை பாராளுமன்றத்தில் வினவியபோது, அதற்கு விடையளித்தவர் யு. என். பி. தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா, அவரது பதிலுக்கு ஆதரவளிப்பது போல அரசாங்கக் கட்சியினர் ‘சபாஷ்’ போட்டனர்.

இவ்வாறு புதன்கிழமை மாலை மாவிசந்திப் பிள்ளையார் ஆலய முன்றலில் தமக்கு இரு கார்கள் அன்பளிப்புச் செய்யப்பட்ட வைபவத்தின்போது உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் கூறினர். இளைப்பாறிய ஆசிரியர் திரு. வி. கணபதிப்பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:-

தமிழ்மக்கள் அரசாங்கத்தை எதிர்பார்த்திருப்பதை விட்டு தமது பொருளாதார வளத்தைக் கட்டி யெழுப்பும் பணியில் உடனடியாக ஈடுபட வேண்டியது மிக அவசியம்.

ஜப்பான் தேசமக்கள் குறுகியகால எல்லைக்குள் விஞ்ஞான ரீதியில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்து தமது பொருளாதாரத்தைக் கட்டி வளர்த்தமை தமிழருக்கெல்லாம் ஓர் சிறந்த உதாரணமாக இருக்கவேண்டும். தமிழ்ப் பிரதேசங்களில் விவசாயத்தைப் பார்க்க, மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யவே அதிக சந்தர்ப்பங்கள் உள்ளன. கூட்டத்தில் வேறும் பலர் பேசினர்.

## புகை தள்ளும் பஸ்களால் ஆபத்து

### கமிஷன் முன் முறையீடு

மட்டக்களப்பு, வியாழன்

அரசாங்க குமாஸ்தாக்கள் சங்க மட்டக்களப்புக் கிளையின் பொதுக்காரியதரிசி திரு. மேர்வின் நிக்கலஸ் மட்டக்களப்பில் ஓடும் பஸ்ஸுகள் மோசமான நிலையில் உள்ளன என்று பஸ் கமிஷனுக்கு முறையிட்டுள்ளார். மட்டக்களப்பில் ஓடும் பஸ்களில் பெரும்பாலானவை புகை தள்ளுவனவாகவும் பிரயாணத்துக்கு தகுதியற்றவை எனவும் திரு. மேர்வின் நிக்கலஸ் முறையிட்டுள்ளார். அவற்றிலிருந்து வெளியாகும் புகை தெரு வீதிகளில் செல்பவர்களுக்கும் மோட்டார் பிரயாணிகளுக்கும் தீங்கு விளைவிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலர் மட்டக்களப்பில் வேலை செய்து வருகிறார்களாகையால் மட்டக்களப்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே வார இறுதி பஸ்ஸுகள் ஓடவிட வேண்டும் என குமாஸ்தாக்கள் சங்கம் கோரியுள்ளது.

மட்டக்களப்புக் கிராமங்களில் பஸ் போக்குவரத்து வசதிகள் எதுவுமில்லாதபடியால் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கிறதென்றும் போக்குவரத்து வசதிக் குறைவால் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறதென்றும் திரு. நிக்கலஸ் கூறியுள்ளார்.

## இன்று

வவுனியா, குடியிருப்பில் உஷா தையல் மெஷின் நிலையமொன்றை வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. எஸ். வன்னியசிங்கா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்குத் திறந்து வைப்பார்.

## எத்தனை குண்டுகள் பரிசோதனை?

வாஷிங்டன், அக். 11

செப்டம்பர் மாதம் முதல் திகதி சோவியத்யூனியன் அணு ஆயுதபரீட்சைகளை மீண்டும் ஆரம்பித்ததிலிருந்து இது வரை இருபதுக்கு அதிகமான குண்டுகளைப் பரீட்சை செய்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி திரு. கென்னடி நேற்று பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

19 குண்டுகளை ரஷ்யா பரீட்சித்துள்ளதாக அமெரிக்க அணுசக்திக் கமிஷன் அறிவித்திருந்தது.

மேலும் பல குண்டுகளை ரஷ்யா பரீட்சித்துள்ளதாக அமெரிக்க இரகசிய ஸ்தாபனம் கண்டுபிடித்துள்ளது. குண்டுப் பரீட்சைபற்றி ரஷ்யா எதுவும் தெரிவிக்கவில்லை.

## சிறைக் கைதிகள் பரிசீலனை

கொழும்பு, வியாழன்

சிறிது காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பெற்றுச் சிறைவாசம் செய்துவரும் கைதிகளை உள்நாட்டமைச்சு பரிசீலனை செய்து வருகிறது. இக்கைதிகள் பற்றிய சகல விபரங்களையும் அறிந்து தமக்கு விரைவிற் சமர்ப்பிக்குமாறு உள்நாட்டமைச்சு நிரந்தரக் காரியதரிசி திரு. ஷெல்டன் சி. பெர்னண்டோ சிறைப்பகுதி அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

சிறிதுகாலம் சிறைத் தண்டனை அனுபவித்து வருபவர்கள் நிலைமை இரு காரணங்களுக்காகப் பரிசீலனை செய்யப்படவிருப்பதாக உள்நாட்டு அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன. எந்த எந்த நிலைமையின் கீழ் ஆக்கைதிகள் தண்டனையை அனுபவித்து வருகிறார்கள் என்பது ஒன்று. மற்றையது, இவர்கள் சிறைத்தண்டனை அனுஷ்டிக்கும் வகையில் ஒரு புதிய திட்டம் உருவாக்குவது.

## பண்டிதருக்குப் பாராட்டு விழா

பண்டிதர் சு. அருளம்பலம் ‘பதிற்றுப்பத்து’க்குச் சிறந்த உரை எழுதியதற்காக யாழ்ப்பாண ஆரிய திராவிடபாஷாபிவிருத்திச்சங்கத்தின் ஆதரவில் ஒரு பாராட்டுவிழா 15-10-61 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தீசுவர வித்தியாலயத்தில் நடைபெறும். அறிஞர்கள் பலர் பாராட்டுரை வழங்குவார்கள்.

## மரண அறிவித்தல்

யாழ் ஆஸ்பத்திரி கூட்டுறவு சிக்கன சேமிப்புச் சங்கத்தின் அங்கத்தவர் எஸ். கந்தசாமியின் மகள் நகுலேஸ்வரி காலமாகிவிட்டார். அன்னாரின் மரணச் சடங்கு 12-10-61காலை 11 மணிக்கு ஏழாலை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. எமது அங்கத்தவர்கள் அவருக்கும் அவரது பாரியாருக்கும் எங்கள் ஆழ்ந்த கவலையை அறியத் தருகின்றனர். இங்ஙனம், யா. ஆ. கூ. சி. சே. சங்கக் காரியதரிசி.

## அறிவித்தல்

இந்நகரில் சைக்கிள் திருடர் அதிகம். எனவே, உங்கள் சைக்கிளை தனியாக விடாதீர்கள். “குதிரைலாடன்” போன்ற பூட்டை நம்பாதீர்கள். சங்கிலியும் பூட்டுமே போட்டுப் பூட்டுங்கள்.

R. C. De NIESE,
பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர்,
யாழ்ப்பாணம்.

இந்தியர் பிரச்சினை:

# பூர்வாங்க பேச்சு அடுத்த வாரம்?

கொழும்பு, வியாழன்

**இலங்கை இந்திய வர்த்தகம் சம்பந்தமாக இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இம்மாதம் 15-ந் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்யவிருக்கும் இலங்கை வர்த்தக உணவு அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின இந்திய பாதுகாப்பு வெளிவிவகார இலாகா அதிகாரிகளுடன் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் பிரச்சினை பற்றியும் பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் நடத்தக் கூடுமெனத் தெரியவருகிறது.**

சமீபத்தில் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தமது உத்தியோக வாசஸ்தலத்தில் கூட்டிய ஒரு மகாநாட்டில் திரு. இலங்கரத்தினவும் கலந்து கொண்டதும் இந்திய அதிகாரிகளுடன் பூர்வாங்க பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு இந்தியாவிலுள்ள இலங்கை ஸ்தானிகருக்கு அதிகாரம் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதர் சேர் ரிச்சார்ட் அலுவிஹாரையுடன் திரு. இலங்கரத்தினவும் இந்திய அதிகாரிகளுடன் பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் நடத்துவாரென்றும் இப்பேச்சுவார்த்தைகளின் நிலைமைக்கேற்ப இவ்வருட இறுதியில் அல்லது அடுத்த வருட ஆரம்பத்தில் இருநாடுகளின் பிரதமமந்திரிகளும் சந்தித்துப் பேச ஒழுங்கு செய்யப்படுமென்றும் அறியப்படுகிறது.

# புகையிலை பயிரிடுவோருக்கு கடன் பண உதவி

## காணி விவசாய இலாகா நடவடிக்கை

கொழும்பு, வியாழன்

புகையிலை பயிரிடுபவர்களுக்கு காணி விவசாய நீர்ப்பாசன இலாகா கடன்பணம் உதவி வருகிறது. உள்நாட்டுப் புகையிலையின் அபிவிருத்திக்காகவே இவ்வாறு காணி விவசாய இலாகா பணம் உதவுகிறது. புகையிலை பயிரிடுவோர் சங்கங்களுக்கும் பலநோக்கு சங்கங்களுக்கும், புகையிலை சேமிப்பு நிலையங்களமைப்பதற்கும், புகையிலை வேலைகள் செய்பவர்களுக்கும் வீடு வசதியளிப்பதற்குமென கடன் பணம் உதவப்பட்டு வருகின்றது. இக்கடன் பணத்தை இரண்டு சதவீத வட்டியுடன் 10 வருட காலத்தில் கடன்படும் விவசாயிகள் திருப்பி ஒப்படைக்கலாம்.

குறுகிய காலப் பகுதியில் திருப்பிக் கொடுக்க வேண்டிய முறையிலும் விவசாயிகளுக்கும் கடன் பணம் வழங்கப்பட்டு வருகிறது. இத்தகைய கடன் பணத்தை விவசாயத்துக்குச் செலவிடமட்டும் தான் கடன்படுவோர் உபயோகித்துக் கொள்ளலாம். புகையிலை அறுவடை செய்யும் காலங்களில் 2 சத வீத வட்டியுடன் இப்பணம் திருப்பி ஒப்படைக்கப்படவேண்டும். ஒரு ஏக்கர் நிலத்தில் புகையிலை பயிரிடுவதற்கு 150 ரூபாயும்உரத்துக்கு 90 ரூபாயும், விதை நடுவதற்கு 20 ரூபாயும் என்ற அளவு அடிப்படையில் புகையிலை பயிரிடுவோருக்குக் கடன் பணம் வழங்கப்படும் புகையிலை பயிரிடுவோருக்கு பயிரிடுகைபற்றி இலவசமாக அறிவூட்டும்.

## கார் மோதி மரணம்

கல்முனை, வியாழன்

கல்முனையைச் சேர்ந்த அத்தம்பாவா அவ்வி உம்மா (45) என்பவர் மீது கார் ஒன்று மோதியதால் அவர் கல்முனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு காலமானர்.

இவர் சாய்ந்தமருதுவிலிருந்து கல்முனை நோக்கி வீதி வழியே நடந்து சென்றுகொண்டிருந்தார் எனத் தெரியவருகிறது. அவர் நடந்துகொண்டிருக்கும் போது மோட்டார் கார் ஒன்று அவர் மீது மோதி அவரை 33 அடிக்கு அப்பால் வீசியெறிந்ததாம்.

கல்முனை மாஜிஸ்டிரேட் திரு. பி. ஆர். டேவிட் சம்பவம் நிகழ்ந்த ஸ்தலத்தைப் பார்வையிட்டார்.

விசாரணையின் பின்னர் கார் டிரைவர் காஸிமை பிணையில் செல்லுமாறு மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

## விமானவிபத்து

கல்கத்தா, அக். 12

கல்கத்தாவுக்கருகில் நடைபெற்ற விமானவிபத்தொன்றில், 3 விமானப்படை அதிகாரிகள் மாண்டனர்.

# ராஜரத்தின சனிக்கிழமை விடுதலையாவார்

## உபதேர்தலில் போட்டியிடுவார்

கொழும்பு, வியாழன்

வெலிமடைத் தொகுதி முன்னாள் எம். பி. யும் ஜாதிக விமுக்திப் பெரமுனையின் தலைவருமான திரு. கே. எம். பி. ராஜரத்தின இம்மாதம் 14-ந் திகதி சனிக்கிழமை சிறையிலிருந்து விடுதலையாவாரெனத் தெரிகிறது.

விடுதலையாகி **வெளி**வரும் திரு. ராஜரத்தினவுக்கு வீரவரவேற்பளிப்பதற்கு வெலிமடைத் தொகுதியைச் சேர்ந்த பலர் ஏற்பாடுகள் செய்து வருவதாகவும் 20,000 ரூபாய் பெறுமதியான ரூபாய் நோட்டுகளைக் கொண்ட ‘காசுமாலை’ அணிவிக்க ஒழுங்குகள் செய்துவருவதாகவும் தெரியவருகிறது

### உப தேர்தலில் போட்டியிடுவார்

வெலிமடை உப தேர்தலில் தமது கணவர் நிச்சயமாகப் போட்டியிடுவாரென ஊவா மாகாண எம். பி. யான திருமதி குசுமா ராஜரத்தின தெரிவித்தார். உப தேர்தலுக்கான அபேட்சகர் நியமனப் பத்திரங்கள் இம் மாதம் 18-ந் திகதி தாக்கல் செய்யப்படும். அன்று திரு. ராஜரத்தினவும் தமது நியமனப் பத்திரத்தைத் தாக்கல்செய்வார்.

தார்பூச்சு வழக்கில் ஆகஸ்ட் மாதம் 23-ந் திகதி 18 மாதச் சிறைத் தண்டனை பெற்ற திரு. ராஜரத்தினவின் தண்டனையை நீதி மந்திரியின் ஆலோசனையின் மீது கவர்னர் ஜெனரல் இரண்டு மாதமாகக் குறைத்தார்


சினிமாஸ் திரைகளில் வெகுவிரைவில் எதிர்பாருங்கள்!
மனோஹர், தேவிகா நடித்த
பாஞ்சாலி

கடைசி வாரம்
கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த
பாவ மன்னிப்பு

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை6-30 க்கும் இரவு 9-30 க்கும்
சனி, ஞாயிறு மெட்னி மாலை 2-30-க்கு
கிறிஸ்டியான-மாட்டெல் கர்லோஸ்பயன நடித்த
ஆதாமும் ஏவாளும்
(ஆங்கிலம்)

தினசரி மாலை 4-15 மணிக்கும்
சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும்
றுத்தின் சீவிய சரித்திரம்
(ஆங்கிலம்)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவாசளது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.